முச்சந்தி முரளி




Registered as a Newspaper
பக்கங்கள் 16 விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 66

புதன்கிழமை
31 ஜனவரி 2024

தை 17 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

# தேர்தல்களை உடன் நடத்துக கொழும்பில் மக்கள் முழக்கம்

## போராட்டத்தை அடக்குவதற்கு பொலிஸாரால் பலப்பிரயோகம்

**கொழும்பு, ஜனவரி 31**

**ஜனாதிபதித் தேர்தல் உள்ளிட்ட பொதுத் தேர்தல்களை உடன் நடத்தவேண்டும் என்று வலியுறுத்தி, கொழும் பில் பல்லாயிரம் மக்கள் திரண்டு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

15



## கண்ணீர்ப்புகையால் பாதிப்புற்று தீவிர சிகிச்சைப் பிரிவில் முன்னாள் எம்.பி. முஜிபுர்

கொழும்பு, ஜன. 31
நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தீவிர சிகிச் சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

15

## பொலிஸாரைத் தாக்கிய இருவர் விளக்கமறியலில்
### மேலும் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 31
யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டைப் பகுதி யில் பொலிஸார் மீது தாக்குதல் மேற் கொண்ட ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களில் இருவர் விளக்கம றியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

15

## யாழ்ப்பாணத்தில் 5,785 வாக்காளர்கள் உயிரோடில்லை!

யாழ்ப்பாணம், ஜன. 31
யாழ்ப்பாணம் மாவட்டத் தில் 5 ஆயிரத்து 785 வாக்காளர்கள் காலமாகி யுள்ளனர் என்று மீளாய் வுத் தகவல்களில் தெரிய வந்துள்ளது.
யாழ்ப்பாணம் மாவட்டத் தில் கடந்த தேர்தல் நிறை வடைந்த

15

## கிணற்றுக்குள்ளிருந்து பெண்ணின் சடலம் மீட்பு!

வவுனியா, ஜன. 31
வவுனியா, குருமன்காடு பகுதியில் உள்ள கிணறொன்றுக்குள் இருந்து இளம் பெண்ணொருவர் நேற்று சடல

15

## கோழித் தகராறு குடித்தது உயிரை!
### சுன்னாகத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 31
உறவு முறையான இருவருக்கு இடையே இடம்பெற்ற கைகலப்பு கொலையில் முடிவடைந்துள்ளது. இந் தத் துயரச் சம்பவம் சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று இரவு இடம்பெற்றுள்ளது.

15



## கோத்தாபயவை இலங்கை அரசு பொறுப்புக்கூற செய்யவேண்டும்
### சூக்கா வலியுறுத்து

ஜோகன்ஸ்பெர்க், ஜன. 31
கடந்தகாலப் பிரச்சினைகளில் இலங்கை அரசாங்கம் அக் கறையுடன் இருக்கின்றதெனில், போர்க்குற்றங்களிலும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்களிலும் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு இருந்த வகிபாகம் தொடர்பாக அவரைப் பொறுப்புக்கூற வைக்கவேண்டும் என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான செயற்றிட்ட அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

15

## ஐஸ் போதையுடன் கைதானார் பெண்!

வவுனியா, ஜன. 31
வவுனியா - வைரவப்புளியங்குளம் பகுதி யில் வைத்து ஐஸ் போதைப்பொருளுடன் பெண்ணொருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

15

## இழுவைமடியைப் பயன்படுத்தி மீன்பிடித்த ஐந்து பேர் கைது!

மன்னார், ஜன. 31
மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவி லுள்ள விடத்தற்தீவுப் பகுதியில், தடைசெய் யப்பட்ட இழுவைமடியைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட ஐந்து மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.
விடத்தல்தீவு மக்களாலும், கடற்றொழில் திணைக்கள உத்தியோகத்தர்களாலும் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை

15

## எரிவடைந்த நிலையில் மூதாட்டியின் சடலம்

யாழ்ப்பாணம், ஜன. 31
எரிவடைந்த நிலையில் வயோதிபப் பெண் ணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சுன் னாகம் புனித அந்தோ னியார் ஆலய வீதியில் உள்ள வீடொன்றில் இருந்தே

15

## சாந்தனின் விடுதலை விரைவில் சாத்தியம்
### அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்டோருடன் உரையாடிய பின்னர் சிறிதரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31
ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதுசெய் யப்பட்டு, 32 ஆண்டுகள் சிறைவாசத்தின் பின்னர் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்ட பின்னரும்கூட இன்னமும் இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையைச் சேர்ந்த சாந்தனின் விடுதலை விரைவில் சாத்தியம் என்றும், அதற்குரிய

15




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## 5 மீனவர்கள் கைது

கொழும்பு, ஜன. 31

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள விடத்தல்தீவு கடற்கரையில் தடைசெய்யப்பட்ட இழுவைமடியைப் பயன்படுத்தி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 5 மீனவர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயன்படுத்திய இழுவைப் படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர்கள் எருக்கலம்பிட்டி மற்றும் உப்புக்குளம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்டவர்கள் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (எ-56)

# அடுத்த ஆண்டுமுதல் சொத்து வரி

### நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.31**

**அரசின் வருமானத்தை அதிகரிக்க எதிர்பார்த்துள்ளபோதும் மறைமுக வரிகளை அறிமுகப்படுத்தவோ அல்லது வரிகளை அதிகரிக்கவோ எந்த வகையிலும் அரசாங்கம் எதிர்பார்க்கவில்லை எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.**

மறைமுக வரிகள் காரணமாக பொருள்களின் விலைகள் அதிகரிக்காது.

பொருள்களின் கேள்விகள் மற்றும் விநியோகத்தின் அடிப்படையிலேயே அவற்றின் விலைகள் தீர்மானிக்கப்படும். எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் புதிய சொத்து வரியை அறிமுகப்படுத்த அரசு எதிர்பார்த்துள்ளது. இந்தச் சொத்து வரியானது நேரடியான வரி. பெரிய சொத்துகள் இருக்கும் நபர்களிடம் இருந்து இந்தச் சொத்து வரி அறவிடப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-இ)

## ரணிலுக்கு கடைசிக்காலம்

### மரிக்கார் எம்.பி. விளாசல்

கொழும்பு, ஜன. 31

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்கவின் கடைசிக் காலகட்டமே இது. அதனால்தான் தனது கடைசிக் கொள்கை விளக்க உரையை ஆற்றுவதற்காக நாடாளுமன்ற அமர்வை இடைநிறுத்தியுள்ளார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் தெரிவித்தார்.

அவர் ஜனாதிபதிப் பதவிக்கு இரு தடவைகள் போட்டியிட்டார், ஆனால் வெற்றிபெறமுடியவில்லை. தற்போது புண்ணியத்தால் அவருக்குப் பதவி கிடைத்துள்ளது. அடுத்தமுறை அவரால் வெற்றிபெறமுடியாது.

இதை உணர்ந்து ஜனாதிபதிப் பதவியை சிறப்பாக அனுபவித்துவிட்டு விடைபெறவே ரணில் விக்கிரமசிங்க முற்படுகின்றார் என்றும் அவர் தெரிவித்தார். (ம-44)

## சுதந்திரதின ஒத்திகையில் நால்வருக்கு காயம்

கொழும்பு, ஜன. 31

காலிமுகத்திடலில் சுதந்திரதின ஒத்திகைகள் நடைபெற்று வரும் நிலையில் பரசூட்கள் சரியாக விரியாததால் 4 பரசூட் வீரர்கள் கீழே விழுந்து காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நடந்துள்ளது.

பரசூட் வீரர் இருவர் கீழே வீழ்ந்து காயமடைந்தனர். இருவர் கட்டடத்தின் மீது வீழ்ந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இருவர் இலங்கை விமானப்படையைச் சேர்ந்தவர்கள் எனவும், ஏனைய இருவரும் இலங்கை இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் கே.ஏ.என். ரசிக குமார தெரிவித்துள்ளார். (எ-இ)

# யாழ்ப்பாணத்தில் விரைவில் உள்ளக விளையாட்டரங்கு!

### அமைச்சின் செயலாளர் மகேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ளக விளையாட்டரங்குகளுக்கு இருக்கும் பற்றாக்குறை விரைவில் நிவர்த்தி செய்யப்படும் என்று இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வடக்கு மாகாண வீர,வீராங்கனைகளைக்கௌரவிக்கும்வர்ண இரவு நிகழ்வில்பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள விளையாட்டரங்கை அமைப்பது தொடர்பில் எமது அமைச்சு கரிசனையாகவே உள்ளது. அதற்கான இடத்தையும் திட்டச் செலவுகளையும் மதிப்பிடுமாறு மாவட்ட உதவிப்பணிப்பாளரிடம்கூறியுள்ளேன். தற்போது அரசாங்கம் பொருளாதார நெருக்கடிக்குள் இருக்கின்ற நிலையில் பெரிய நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்வதில் சிரமம் இருக்கவே செய்கின்றது. ஆனால், இந்தத் திட்டத்துக்காக புலம்பெயர் மக்களிடமிருந்தும் வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்தும் நிதியுதவிகளைப் பெறமுடியும்.

யாழ்ப்பாணம் மாவட்ட வீர, வீராங்கனைகளுக்கு உள்ளக மைதானங்கள் இல்லாமை ஒரு குறைபாடாக இருந்தாலும் அதைக் கூடிய விரைவில் நிவர்த்திசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ம-27)

## நெடுஞ்சாலை இருளால் அதிகரிக்கும் விபத்துகள்

கொழும்பு, ஜன. 31

அதிவேக நெடுஞ்சாலைகளில் இடம்பெறும் விபத்துகளுக்கு நெடுஞ்சாலைகள் இருளில் மூழ்கியுள்ளமையும் காரணமெனத் தெரிவிக்கப்படுகின்றது. போதைவஸ்துப் பாவனையாளர்கள் செப்பு மின்சாரக் கம்பிகளைத் திருடிச் செல்வதால் கட்டுநாயக்கா கொழும்பு, கரவாப்பிட்டி, கடவத்தை அதிவேக நெடுஞ்சாலைகள் இருளில் மூழ்கிக் காணப்படுகின்றன. இந்த வீதிகளிலுள்ள மின் இணைப்புகளுக்கு செப்புக்கம்பிகளுக்குப்பதிலாக அலுமினியக்கம்பி பொருத்துவது பற்றியும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (ப-6)

## பொதுச்சந்தையை திறக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஆனைவிழுந்தான் கிராமத்தில் 2010 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அமைக்கப்பட்ட சந்தையும், 2022 ஆம் ஆண்டு இந்தச் சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்ட கடைத்தொகுதியும் இதுவரை திறக்கப்படாமல் உள்ளன என கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் கிராமங்களில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழும் நிலையில் இரு கிராம மக்களும் 12 கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஸ்கந்தபுரம் சந்தைக்கும், 30 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி பொதுச் சந்தைக்கும் பொருள்கள் வாங்கச் செல்லவேண்டியுள்ளது.

ஆனைவிழுந்தான் சந்தையையும் கடைத் தொகுதியையும் இயங்க வைப்பதன் மூலம் வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான்குளம் மக்கள் பயனடைவார்கள். அதற்கான நடவடிக்கைகளை கரைச்சிப் பிரதேசசபை எடுக்கவேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)



## டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்.மாநகரப் பிரதேசத்தில் இன்று புதன்கிழமை ஜே/73, ஜே/76 பிரிவுகளிலும் இந்த டெங்குக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர். (ச-17)

## தேன்நிலவுக்காக நீதிமன்று பிணை

கொழும்பு, ஜன. 31

24 வயதான சந்தேகநபர் ஒருவருக்கு அவரது தேன்நிலவைக் கருத்தில்கொண்டு நீதிமன்றால் பிணை வழங்கப்பட்ட சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

இலங்கையின் பாணந்துறை நீதிமன்றில் வழக்கொன்றில் பல சந்தர்ப்பங்களில் முன்னிலையாகாத நிலையில், சந்தேகநபரைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அவர் சட்டத்தரணி ஒருவர் ஊடாக நீதிமன்றில் முன்னிலையானபோது அவரை ஜனவரி மாதம் 30ஆம் திகதிவரையில் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. அவரது நண்பர் ஒருவர், சட்டத்தரணி ஊடாக நீதிமன்றுக்கு முன்வைத்த மனுவில், சந்தேகநபர் புதிதாகத் திருமணம் செய்து தேன்நிலவுக்குச் சென்றிருந்தார் என்றும், அவரது மனைவி தற்போதும் விடுதி ஒன்றில் தங்கியுள்ளார் என்றும், இது தொடர்பாக ஏற்கனவே நீதிமன்றுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அப்பாவியான அவரை சிறையில் அடைத்தால் அவர்களது குடும்ப வாழ்க்கை பாதிக்கப்படும் என்றும் சுட்டிக்காட்டப்பட்ட நிலையில், அவரை ஒரு இலட்சம் ரூபா சரீரப்பிணையில் செல்ல நீதிமன்றம் உத்தரவிட்டது. (எ-இ)

## தாய்லாந்து மொழியும் சுதந்திரதின அழைப்பில்

இலங்கையின் 76 ஆவது சுதந்திரதின மலர் ஜனாதிபதியின் உத்தரவுடன் இந்தமுறை சிங்களம், தமிழ், ஆங்கிலம், தாய் (தாய்லாந்து) என நான்கு மொழிகளில் அச்சிடப்படவுள்ளது.

சுதந்திரதின நிகழ்வுகளில் தாய்லாந்துப் பிரதமர் ஸ்ரேதா தவிசின் விசேடவிருந்தினராககலந்துகொள்ளவுள்ளதால் அவரைக் கௌரவிக்கும் முகமாகவே தாய்மொழியில் சுதந்திரதின மலர் அச்சிடப்படவுள்ளது.

இந்தமுறை சுதந்திரதின நிகழ்வுகளில் இராணுவ அணிவகுப்பு மட்டுமே இடம்பெறுமெனவும் கலாசார நிகழ்வுகள் எதுவும் இடம்பெறமாட்டாது எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ப-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீர்வு வழங்காவிட்டால் மீண்டும் போராட்டம்!



## சுகாதாரத்துறை ஊழியர்களின் தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை

**கொழும்பு, ஜன.31**

**தங்களது பிரச்சினைகளுக்குத் அரசாங்கம் தீர்வு வழங்கத் தவறினால் எதிர்வரும் முதலாம் திகதி முதல் மீண்டும் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தப்படும் என்று சுகாதாரத்துறை ஊழியர்களின் தொழிற் சங்கங்கள் அறிவித்துள்ளன.**

கொடுப்பனவுகள் தொடர்பாகப் பேச்சு நடத்தப்படும் என்று ஜனாதிபதி உறுதியளித்திருந்தார்.

அவர் வெளிநாடு சென்று தற்போது நாடு திரும்பியுள்ள போதும், இதுவரை இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடவில்லை என்று தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டியுள்ளன. அதேவேளை, பல சுகாதாரத் தொழிற்சங்கங்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் மேற்கொண்டன. இந்த ஆர்ப்பாட்டங்களில் தாதியர்கள், மருத்துவர்கள், துணை மருத்துவர்கள், முகாமைத்துவ சேவை கனிஷ்ட ஊழியர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர் என்று இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் ஷனக போபிட்டிய தெரிவித்தார். (எ-இ)

## அதிக கட்டணத்தை வசூலித்த மருத்துவமனைக்குத் தண்டம்

கொழும்பு, ஜன.31

சிகிச்சைக்காக வரும் நோயாளிகளிடம் அதிக கட்டணத்தை அறவிட்ட தனியார் மருத்துவமனை நிர்வாகம் ஒன்றுக்கு மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் 25 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

தண்டப் பணத்தைச் செலுத்தாவிட்டால் 6 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டும் என்றும் உத்தரவிட்டது.

2023ஆம் ஆண்டு சிகிச்சை பெற்ற ஒருவரிடம் மருத்துவமனை நிர்வாகம் அதிகளவிலான தொகை பெற்றுள்ளது என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்டவரின் மகன் சுகாதார அமைச்சுக்கு முறைப்பாடு வழங்கியதையடுத்து, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் உணவு மருந்துப் பரிசோதகரால் அந்த மருத்துவமனை நிர்வாகம் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் வழங்கப்பட்ட கட்டணச் சீட்டு உட்பட 6 ஆவணங்கள் சாட்சிக்காக நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன. மருத்துவமனை நிர்வாகம் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து, நீதிமன்றம் தண்டப் பணம் விதித்துள்ளது. (எ-இ)

## நிலுவை வெறும் 18 சதம்; வீட்டு மின் துண்டிப்பு

கொழும்பு, ஜன. 31

மின்பாவனைக் கட்டணத்தில் நிலுவையாகக் காணப்பட்ட 18 சதத்தைச் செலுத்தாமையால் காலியைச் சேர்ந்த ஒருவரின் வீட்டின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது.

காலி, கல்வடுகொடவையில் உள்ள வீடொன்றின் மின் இணைப்பே துண்டிக்கப்பட்டுள்ளது. மின் துண்டிக்கப்பட்டதால் குளிர்சாதனப் பெட்டியிலிருந்த மருந்துகள் உட்படப் பல பொருள்கள் நாசமாகியுள்ளன என்று வீட்டின் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (எ-இ)

## 868 பேர் கைது

கொழும்பு, ஜன.31

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் 'யுக்திய' விசேட சோதனை நடவடிக்கைகளில் நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 868 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப்பொருள் குற்றச்சாட்டுகளுடன் 536 பேரும், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட பட்டியலிலுள்ள 332 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)

## சமூகச் செயற்பாட்டாளர் சி.ஐ.டி.யினரால் கைது!

சமூகச் செயற்பாட்டாளரான பியத் நிகேஷல குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணைப் பிரிவினரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். வாக்குமூலம் பெற்றுக்கொள்வதற்காக அவர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்டிருந்த நிலையில், வாக்குமூலம் பெறப்பட்டதன் பின்னர் கைது செய்யப்பட்டார்.

பொதுமக்களின் அமைதியைச் சீர்குலைத்தமை, அரசாங்கத்தின் மீது பொதுமக்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியமை மற்றும் பொதுமக்களை ஆத்திரமடையச் செய்யும் வகையில் காணொலிகளை வெளியிட்டமை போன்ற குற்றச்சாட்டுகளின் கீழ் பியத் நிகேஷல கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## சி.சி.ரி.வி.யில் சிக்கிய 675 மீறல்கள்

கொழும்பில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்புக் கமராக்களின் மூலம் ஒரு வார காலத்தில் 675 போக்குவரத்து விதி மீறல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் இந்திக ஹப்புகொட தெரிவித்துள்ளார்.

108 கமராக்கள் முக்கியமான இடங்களில் பொருத்தப்பட்டுள்ளன என்றும், போக்குவரத்து விதி மீறல்களைக் கட்டுப்படுத்துவதும் பாதுகாப்பான போக்குவரத்தை நடைமுறைப்படுத்துவதுமே இதன் நோக்கம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-6)

## பெலியத்த துப்பாக்கிச் சூடு; இரு பெண்கள் கைது!

பெலியத்தவில் ஐந்து பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என ஹக்மன பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் ரத்கம பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் 23 – 33 வயதுடையவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். குற்றச்செயலுக்குப் பயன்படுத்திய இரு துப்பாக்கிகளும் இந்தப் பெண்களில் ஒருவருக்குச் சொந்தமான மோட்டார் சைக்கிளும் கராப்பிட்டியவில் இருந்து பூஸா பகுதிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ-இ)



# புதினம் தெரியுமோ?

**'சட்டம் போட்டுத் தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது. அதைத் திட்டம் போட்டுத் திருடுற கூட்டம் திருடிக்கொண்டே இருக்குது' என்டொரு எம்.ஜி.ஆர். பாட்டு இருக்கு. ஆனால் இப்ப என்னெண்டால், சட்டம் போட்டுத் தடுக்கிறவை தங்கட வேலையளை ஒழுங்காக்கவனிக்கிறேலை. அதால திட்டம் போடாமலேயே எல்லாரும் என்னென்ன வேணுமோ அவையெல்லாம் செய்துகொண்டிருக்கினம்.**

**இப்ப மரக்கறியள் கடும் விலை. காரணம் கேட்டால், எல்லாம் அழிஞ்சு போய்ச்சுது எண்டு பிலாக்கணம் பாடுகினம். முந்தியும் இப்பிடி மழை கொட்டினதுதானே. அப்பவும் பயிருகள் அழிஞ்சாலும், இப்பிடித் தட்டுப்பாடோ, விலையேத்தமோ வரேலை. ஆனால் இப்ப கொஞ்ச வருசமாத்தான் உந்தத்தட்டுப்பாடும், விலையேத்தமும். உதுக்கு உண்மையான காரணம் என்னெண்டு தெரியுமோ? வேற என்ன, எல்லாம் காணித்தட்டுப்பாடுதான். எங்கையெல்லாம் தோட்டக்காணியள் இருக்கோ அங்கதான் எங்கட சனத்துக்கு வீடோ, கடையோ, மண்டபமோ கட்டியே ஆகோணுமெண்ட வருத்தம் இப்ப கூடிட்டுது. இதுகள் கூட பரவாயில்லை, இப்ப யாழ்ப்பாணத்தில கராஜ், வாகனங்கள் கழுவிற கடையள் எல்லாமே இப்பிடி நல்ல செம்பாட்டு மண் உள்ள, வளமான தோட்டக்காணியளுக்குள்ளதான் கட்டுகினம். இப்பிடியான கராஜ், வாகனங்கள் கழுவிற கடையளில இருந்து கழிவுத்தண்ணி, ஒயில் எல்லாம் அப்பிடியே பக்கத்துத் தோட்டக் காணியள், கிணறுகளுக்குள்ள ஊறி, அதுகளையும் பழுதாக்குதுகள். இப்பிடிக் கட்டடங்களும், கழிவுகளும் கண்டபடி தோட்டக்காணியளை இல்லாமல் செய்ததுக்கு, அதுகளுக்கு அனுமதி குடுத்தவைதான் காரணம்.**

**நாங்கள் அனுமதி குடுக்கேலை..அவைதான் களவாக் கட்டிப்போட்டினம் எண்டு சிலர் வரிஞ்சுகட்டிக் கொண்டு வருவினம். உந்தக் கட்டடங்கள் எல்லாம் ஒண்டிரண்டு நாளில கட்டிமுடிக்கேலாதுதானே. எப்பிடியும் நாலைஞ்சு மாதமாவது ஆகும். அப்பிடி நாலைஞ்சு மாசமாக் கணக்கா, தோட்டக் காணியளுக்குள்ள கட்டிற 'பில்டிங்குகள்' ஏன் அதுக்கு அனுமதி குடுக்கவேண்டியவையின்ர கண்ணில தென்படுறேலை? அதைவிட அவையள் அனுமதி பெறாமல் காணியளுக்குள்ள கட்டடங்களைக் கட்டியிருந்தால், அதுக்கு அனுமதி குடுக்கவேண்டியவையள் அதுக்கு எதிரா ஏன் சட்ட நடவடிக்கை எடுக்கிறேல? அப்பிடியெண்டால் இப்பிடி சட்டம் போட்டுத் தடுக்கவேண்டியவையளில சனத்துக்கு பயமும் இருக்காதுதானே.**

**வளமான தோட்டக்காணியளை எல்லாம் கட்டடக்காடாக்கிப் போட்டு, இப்ப தோட்டம் செய்யக் காணி இல்லை, மரக்கறி இல்லை எண்டு மாராடிக்கிறது எந்தவகையில நியாயம்? முதல்ல இப்பிடிக் காணி கண்ட இடமெல்லாம் கட்டடத்தால நிரப்பிற வேலையை கைவிட்டால் தான் மிச்சம் உள்ள தோட்டக்காணியளைக் காப்பாத்தமுடியும்.**



-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.கிழக்கில் அதிகரிக்கும் கால்நடைத் திருட்டுகள்

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜன.31**

**வலி.கிழக்கில் இடம்பெற்றுவரும் கால்நடைத் திருட்டுகளைத் தடுப்பதற்கு பிரதேச செயலர் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

இதுதொடர்பாக கால்நடை வளர்ப்போரால் பிரதேச செயலருக்கு கடிதம் ஒன்றும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அதில் கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் அண்மைக் காலமாக வளர்ப்புக் கால்நடைகள் களவாடப்படுகின்றன. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாகிறது. எனவே பொலிஸாருடன் இணைந்து கால்நடைத் திருட்டுகளைத் தடுப்பதற்கு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர். (ச-17)

## மாவட்டச் செயலகம் ஊடாக பன்முகப்படுத்தப்பட்ட நிதி

யாழ்ப்பாணம், ஜன.31

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்டு வந்த நிதி இந்த ஆண்டு மாவட்டச் செயலாளர்களூடாக வழங்கப்படவுள்ளது.

மாவட்டச் செயலாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டங்களில் நிறைவேற்றப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தவேண்டும் எனவும் மாவட்டச் செயலாளர்கள் ஜூலை 31ஆம் திகதிக்கு முன்பாக திட்ட வரைபுகளைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார்.

அதேவேளை, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியைச் சந்தித்து பழைய முறையிலேயே நிதியை ஒதுக்குமாறு (தங்களிடம் வழங்குமாறு) கோரிக்கை விடுக்கவுள்ளனர் என்று ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளனர்.

கடந்த மூன்று ஆண்டுகளாக பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் மாவட்ட அபிவிருத்திக்கு நிதி ஒதுக்கப்படவில்லை. இறுதியாக 2020ஆம் ஆண்டு கொழும்புக்கு ஆகக்கூடிய தொகையாக ஆயிரத்து 90 மில்லியனும், ஆகக்குறைந்த தொகையாக கிளிநொச்சிக்கு 80 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப-6)

## மின் கட்டணம் செலுத்த புதிய செயலி அறிமுகம்

கொழும்பு, ஜன.31

இலங்கை மின்சாரசபையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள **"சீ.ஈ.பி. ஹெயார் அப்"** ஊடாக மக்கள் இனி வரும் காலங்களில் மின்பட்டியல்களைச் செலுத்தலாம் என இலங்கை மின்சாரசபை தெரிவித்துள்ளது.

மேலும் தபால் நிலையங்கள், வங்கி பணம் செலுத்தும் இயந்திரங்கள், பல்பொருள் அங்காடிகள், இலங்கை மின்சார சபை உத்தியோகபூர்வ **இணையத்தளம் மற்றும் "M cash"** ஊடாகவும் மின்கட்டணத்தைச் செலுத்தலாம் என மின்சாரசபை அறிவித்துள்ளது. (ப-6)

## வடிகால்களை சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன.31

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பிரதேச செயலாளர் பிரிவின் இரு கிராம அலுவலர் பிரிவுகளான இரணைப்பாலை, ஆனந்தபுரம் கிராமங்களில் உள்ள வீதியோர வடிகால்களைச் சீர்செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இரணைப்பாலை கிராம அலுவலர் பிரிவில் 450 குடும்பங்களும், ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் 284 குடும்பங்களும் தற்போது வாழ்கின்றன. இந்தக் கிராமத்தில் மழை வெள்ளம் ஒவ்வொரு காணியின் வழியாகவும் வழிந்தோடுகின்ற நிலைமை காணப்படுகின்றது. இதனால் வீதிகளின் வடிகால்களைப் புதிதாக அமைத்துத் தர வேண்டும் என்று இரு கிராமங்களின் மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)



## கிளி.மாவட்டச் செயலரை சந்தித்த கட்டளைத் தளபதி

கிளிநொச்சி, ஜன.31

யாழ். பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதியாகப் பதவியேற்ற மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க, கிளிநொச்சி மாவட்ட செயலர் றூபவதி கேதீஸ்வரனை மாவட்டச் செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். (ப-113)

## பெண்கள் வேலைவாய்ப்பு; விரைவில் சட்டத் திருத்தம்

பெண்களின் வேலைவாய்ப்புத் தொடர்பில் கடை மற்றும் அலுவலகப் பணியாளர்கள் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கு தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தச் சட்டத்துக்கமைய இரவு 10 மணிக்குப் பின்னர் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான நிறுவனங்களில் பெண்களை பணியில் அமர்த்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பு, போக்குவரத்து வசதிகள், ஓய்வெடுக்கும் வசதிகள் உள்ளிட்ட நலன் தொடர்பான விதிமுறைகள், நிபந்தனைகளை நிறுவன உரிமையாளர் வழங்கவேண்டும் என்று திருத்தப்பட்ட சட்ட வரைவில் கூறப்பட்டுள்ளது. (எ-இ)

## தகவல் அறியும் வசதியை இலகுபடுத்த புதிய செயலி

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய செயலி ஒன்று நேற்றுமுன்தினம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மாவட்டச் செயலக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளையின் ஒழுங்குபடுத்தலில், மேலதிக மாவட்டச் செயலர் எஸ். முரளிதரனின் வழிகாட்டலில், மாவட்ட 'விதாதா' உத்தியோகத்தர் த.முரளிதரன் இந்தச் செயலியை உருவாக்கினார்.

அனைத்துத் தரப்பினருக்கும் தேவையான தகவல்களை இலகுவாகவும், விரைவாகவும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட குறித்த செயலியை கிளிநொச்சி மாவட்ட செயலர் றூபவதி கேதீஸ்வரன் அறிமுகம் செய்து வைத்தார்.

இதனூடாகத் தகவல் அறியும் உரிமைச் சட்டத்துடன் தொடர்புடைய தகவல்கள் உள்ளிட்ட தேவையான பல தரவுகளை இந்தப் புதிய செயலியின் **"https://kilisec.info"** மூலம் பெற்றுக்கொள்ள முடியும். (ப-113)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** திடீர் செலவுகள் ஏற்பட்டாலும், தேவையான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்பட வாய்ப்பு உள்ளது. பொறுமை அவசியம்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. காரியங்கள் சாதகமாக முடியும். உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தைவழி உறவுகளால் ஆதாயம் உண்டாகும்.

**மிதுனம்:** எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சிலருக்கு உறவினர்களுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்புள்ளது. பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை.

**கடகம்:** காரியங்கள் அனுகூலமாகும். புதிய முயற்சிகளுக்கு சாதகமான நாள். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் எதுவும் இருக்காது. எதிர்பார்த்த தகவல் கிடைக்கும். மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்:** செலவுகள் அதிகரிக்கும் நாள். கையிருப்பு கரைவதுடன் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். பிணக்குகள் நீங்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் ஏற்படலாம்.

**கன்னி:** பணவரவுக்கு வாய்ப்பு ஏற்படும். முக்கியமான முடிவுகள் சாதகமாக முடியும். தொலைதூரத்திலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். உங்கள் ஆலோசனைக்கு முக்கியத்துவம் கிடைக்கும்.

**துலாம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். உங்கள் முயற்சிகளுக்கு உறவினர்கள் ஒத்துழைப்புத் தருவார்கள். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். எதிரிகள் வகையில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேசும்போது கவனமாக இருக்கவும். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்படலாம். பாதிப்பு எதுவும் இருக்காது.

**தனுசு:** புதிய முயற்சி எதுவும் வேண்டாம். அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். செலவுகளைச் சமாளிக்க வேண்டிய சூழ்நிலையும் சிலருக்கு ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் – மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்னியம் அதிகரிக்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**கும்பம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். எதிர்பார்த்த பணஉதவி கிடைக்கும். செலவு செய்யவேண்டிவரும். பணவரவு கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்தவும். சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். மனவருத்தங்கள் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணவாளக்கோலம்

சாவகச்சேரி, ஜன. 31

சாவகச்சேரி அருள்மிகு அமிர்தபாஷினி அம்பாள் சமேத சந்திரசேகர வாரிவனநாதர் சிவன் ஆலயத்தில் இன்று புதன்கிழமை கும்பாபிஷேகதின மணவாளக்கோல உற்சவம் இடம்பெறவுள்ளது. காலை 7 மணிமுதல் பூஜைகள் ஆரம்பமாகி ஆயிரத்து எட்டுச் சங்குகளால் சங்காபிஷேகம் இடம்பெற்று, மதியம் அடியார்களுக்கு மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது. அடியார்கள் பூஜைக்குத் தேவையான பூக்கள் மற்றும் பால் போன்ற பொருள்களை வழங்குவதுடன் பூஜைகளில் கலந்துகொண்டு அமிர்தபாஷினி அம்பாள் உடனுறை சந்திரசேகர வாரிவனநாதர் அருள்பெற்றுய்யுமாறு ஆலயத் தர்மகர்த்தா கேட்டுக் கொண்டுள்ளார். (எ-இ)

## சொற்பொழிவு

பன்னாலை, ஜன. 31

சைவ வாழ்வியலில் பெரியபுராணம்பெறும்முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகச் சிவநெறிப் பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் தெல்லிப்பழை பன்னாலை திருவருள் மிகு சிவபூதராயர் ஆலயப் பிரதான மண்டபத்தில் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் பெப்ரவரி 2 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது. சேக்கிழார் பெருமானின் குருபூஜையைத் தொடர்ந்து இளஞ்சைவப்புலவர் க. கைலநாதன் சொற்பொழிவை ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து சொற்பொழிவிலிருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (ப)

# குடிதண்ணீருக்குத் தவிக்கும் ஆனந்தபுரம் கிராம மக்கள்

### கிணறுகள் உவரடைவதைத் தடுக்குமாறு கோரிக்கை


**முல்லைத்தீவு, ஜன.31**

**புதுக்குடியிருப்பு, ஆனந்தபுரத்தில் கிணறுகள் உவரடைந்துள்ளதால் பொதுமக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.**

அண்மையில் பெய்த பெரும் மழை காரணமாக பச்சைபுல்மோட்டை ஊடாக உவர் நீர் கிராமத்துக்குள் புகுந்ததாலேயே கிணறுகள் உவரடைந்துள்ளன என்று கிராமக்கள் தெரிவித்தனர்.

தற்போது இந்தக் கிராமத்தில் வாழ்கின்ற 247 குடும்பங்களுக்கும் புதுக்குடியிருப்பிலிருந்து குழாய்கள் மூலமே குடி தண்ணீர் வழங்கப்படுகின்றது. பச்சைப்புல்மோட்டை வழியாகப் பரவும் உவர் நீர் பரம்பலைத் தடுக்காது விட்டால் ஆனந்தபுரம், இரணைப்பாலை போன்ற கிராமங்கள் எதிர்காலத்தில் பெரும் அழிவுகளை எதிர்கொள்ளவேண்டி ஏற்படும்.

அதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முல்லைத்தீவு மாவட்டச் செயலகமும், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகமும் முன்னெடுக்கவேண்டும் என்று ஆனந்தபுரம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)



யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் உள்ள வடிகால்களைச் சுத்தப்படுத்தும் பணி கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மாநகரசபையின் வாய்க்கால் சுத்திகரிப்பு அணியால் முன்னெடுக்கப்பட்டது. (ப-66)

### வவுனியா தெற்கில்

# ஆசிரியர் விருத்தி நிலைய கட்டட விடுவிப்பில் இழுபறி

வவுனியா, ஜன. 31

ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம் அமைப்பதற்கு வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் இழுத்தடிப்புச் செய்துவருகிறார். இதனால் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ் சுமத்தியுள்ளது.

இதுதொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்குக் கடிதமொன்றையும் அனுப்பி வைத்துள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம்.

அந்தக் கடிதத்தில் மேலும் உள்ளதாவது:-

வவுனியா தெற்குக் கல்வி வலயத்திலுள்ள வாண்மை சார் ஆசிரிய அபிவிருத்தி மத்திய நிலையச் செயற்பாடுகள் செட்டிகுளத்தில் ஆரம்பிக்கப்பட்ட போதும் இட அமைவு மாவட்டத்தின் மத்திய பகுதியில் காணப்படாமையால் பல்வேறு தடங்கல்கள் ஏற்பட்டன.

இதனால் தற்காலிகமாக வவுனியா நகரின் மத்தியிலே பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வந்தன. தற்போதைய பொருளாதார நெருக்கடியைக் கருத்திற்கொண்டு புதிய கட்டடத்துக்குப் பதிலாக வவுனியா தெற்குக் கல்வி வலயத்தில் காணப்படும் வெறுமையான கட்டடம் ஒன்றை கற்றல் வள நிலையத்துக்குத் தருவதாக மத்திய கல்வி அமைச்சு அறிவித்தது.

ஆயினும் இந்தக் கட்டடத்தை முழுமையாக வழங்குவதில் வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் இழுத்தடிப்புச் செய்து வருகிறார். இதனால் கல்விச் செயற்பாடு பாதிப்புக்குள்ளாகிறது. எனவே ஒதுக்கப்பட்ட கட்டடத்தை முழுமையாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ச-110)



# மன். மருத்துவமனையில் பொலித்தீனுக்குத் தடை!

மன்னார், ஜன. 31

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனை மற்றும் மருத்துவமனை வளாகத்தில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

சிகிச்சைக்காக வருபவர்கள், நோயாளர்களைப் பார்வையிட வருபவர்கள் பொலித்தீன் பைகளுக்குப் பதிலாக உக்கக் கூடிய அல்லது மீளப் பயன்படுத்தக்கூடிய பைகளைக் கொண்டுவர வேண்டும் என்று மருத்துவமனை நிர்வாகம் கோரிக்கை விடுத்துள்ளது.

மருத்துவமனை நிர்வாகத்தினரால் பொலித்தீன் பைகளுடன் வருபவர்களிடமிருந்து பொலித்தீன் பைகள் வாங்கப்பட்டு தற்காலிகமாக மாற்றீட்டு பைகள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-56)

# நுளம்புக் குடம்பி; உடன் சட்ட நடவடிக்கை!



சாவகச்சேரி, ஜன. 31

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் டெங்குத்தொற்று அதிகரித்துள்ளதால் மக்கள் டெங்கு நுளம்பு உற்பத்தியாகக்கூடிய இடங்களை இனங்கண்டு அவற்றைத் துப்புரவு செய்யவேண்டும் என்று சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தினர் அறிவித்துள்ளனர்.

கோயிற்குடியிருப்பு, கல்வயல் மீசாலை கிழக்கு போன்ற இடங்களில் டெங்குத் தொற்று அதிகரித்துள்ளது. டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் நேற்று நாவற்குழி மேற்குப் பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில், இன்று புதன்கிழமை தென்மட்டுவில் பகுதியிலும் மேற்கொள்ளப்படவுள்ளன.

டெங்கு நுளம்பு உற்பத்தியாகக் கூடிய இடங்கள் காணப்படின் குடியிருப்பாளர்கள் மற்றும் காணிகளை பராமரிப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ப-9)

# ஐஸ் தொழிற்சாலையால் நிலத்தடி நீருக்கு ஆபத்து

### கோவில்குடியிருப்பு மக்கள் விசனம்

முல்லைத்தீவு, ஜன. 31

முல்லைத்தீவு நகரில் கோவில்குடியிருப்பில் உள்ள ஐஸ் தொழிற்சாலையால் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றது என்றும், நிலத்தடி நீர் மாசுபடுகின்றது என்றும் கிராம மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் இரசாயன கழிவுகள் நிலத்துடன் கலப்பதால் எதிர்காலத்தில் சூழலியல் பிரச்சினைகள் ஏற்படும். தொழிற்சாலைக்கு எதிராக மாவட்ட செயலர் மற்றும் சுற்றுச்சூழல் அதிகார சபையினர் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்று கிராமத்தின் பொது அமைப்புகள், கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், நலன்விரும்பிகள் ஆகியோர் இணைந்து வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப)

# வட்டுவாகல் ஆலடிச் சூழலை சுற்றுலா மையமாக்கக் கோரிக்கை

முல்லைத்தீவு, ஜன. 31

முல்லைத்தீவு, வட்டுவாகல் ஆற்றின் ஆலடி மரச் சூழலைச் சுற்றுலா மையமாக மாற்றவேண்டும் என்று பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

வட்டுவாகல் ஆற்றுப் பகுதிக்கு தென்னிலங்கை உட்படப் பல இடங்களிலிருந்து நாள்தோறும் பெருமளவு சுற்றுலாப் பயணிகள் வரும் நிலையில் இந்தப்பகுதியில் குடிநீர், பொது மலசல கூட வசதிகள் ஏற்படுத்தப்படாத நிலைமை காணப்படுகின்றது.

இந்தநிலையில் வட்டுவாகல் ஆற்றுக்கு அருகிலுள்ள ஆலமரச் சந்தியை சுற்றுலா மையமாக உருவாக்குவதன் மூலம் சுற்றுலாவிகள் நன்மையடைவார்கள் என பொது அமைப்புகள் தெரிவித்துள்ளன. (ப-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியின் கூட்டணி பன்றிகளின் பண்ணை!



## அங்கு சிங்கங்கள் செல்லாது விமல் வீரவன்ஸ தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 31
சிங்கங்கள் பன்றிகளின் பண்ணைக்குள் செல்லாது, எனவே, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் அமையும் புதிய கூட்டணியில் நாம் இணையமாட்டோம் - என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போது முன்னாள் இராணுவத் தளபதி தயா ரத்னாயக்க ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்தமை குறித்தும், மைத்திரிபால சிறிசேன தரப்பால் உருவாக்கப்பட்டு வரும் புதிய கூட்டணி குறித்துமே அவர் இவ்வாறு கூறினார்.

அதேவேளை, எட்கா மட்டுமல்ல எம்சிசி உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கான பேச்சுகளும் இடம்பெறுகின்றன. இவை தொடர்பில் நாட்டில் உள்ள முற்போக்கு சக்திகள் குரல் எழுப்பாமை கவலையளிக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார். (அ-ம-44)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி சசிரேகா ரதீசன்
NDT (Maths), B.Ed (Maths)



திருமதி தனுஜா அகிலன்
NDT (Music), B.Ed (Primary)



இன்று பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுகின்ற தேசிய கல்வி நிறுவகத்தின் பட்டமளிப்பு விழாவில் கல்வி மாணிப்பட்டம் பெறுகின்ற எமது வித்தியாலய ஆசிரியர்கள் மேலும் பட்டங்களும் பதவி உயர்வுகளும் பெற்று சிறப்பாக வாழ மன மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்.

31.01.2024

பாடசாலைச் சமூகம்
யா/மட்டுவில் தெற்கு சரஸ்வதி
வித்தியாலயம், சாவகச்சேரி.

## வேலை ஆட்கள் தேவை

யாழ் நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மற்றும் பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை.

- மேலும் கணினி அனுபவமுள்ள பில் கிளாக்
- வரவேற்பாளர்
- பொதி செய்பவர்
- விற்பனையாளர்

உடன் தேவை. (CR 41678) S-1

தொடர்புகளுக்கு: 077 748 8093

## ஒன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 19.05.1924 மறைவு : 09.02.2015

அமரர் கந்தையா தங்கரத்தினம்
திதி: அபரபக்க சஷ்டி

கருணை உள்ளங்கொண்ட அன்னையே!
எங்கள் அன்புத் தெய்வம் அம்மா நீங்கள்
இந்த அவனியை விட்டுப் பிரிந்து ஆண்டுகள்
ஒன்பது ஆனபோதும் இன்றும் உங்கள்
நினைவுகள் ஒவ்வொன்றும் பசுமையாகவே
எங்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து நிற்கின்றது
அம்மா நீங்கள் தெய்வத்துள் நிலைத்து
விட்டாலும் வையத்துள் வாழும் நாங்கள்
நித்தமும் உங்களை நினைத்தே வாழ்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இங்ஙனம்:
குடும்பத்தினர்.
(CS 28004)-S-1

## மரண அறிவித்தல்

அன்னை மடியில்
18 . 10 . 1956



ஆண்டவன் மடியில்
30 . 01 . 2024

### திருமதி றெபேக்கா இரத்தினகுமாரி வரப்பிரகாசம்

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு கல்லடியை வதிவிடமாகவும், தற்போது சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி றெபேக்கா இரத்தினகுமாரி வரப்பிரகாசம் அவர்கள் நேற்று (30.01.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜேக்கப் நீற்றம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிங்கராயர் றோசமுத்து தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற வரப்பிரகாசத்தின் அன்பு மனைவியும், பற்றீசியா ரட்ணராணி, பெலிசியா ஜெயராணி காலஞ்சென்ற கறோலின் சுவர்ணராணி மற்றும் பொணதேத் நிர்மலராணி, யூட் அன்ரன் கிருபானந்தராஜன், பிரான்சிஸ்கா புஸ்பராணி, அன்ரன் சிங்கராஜன் (CDB - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற பெர்ணதேத் மற்றும் சூசியகுமாரி, வசந்தகுமாரி, ராசகுமார் (வியாபாரி, நெல்லியடி), சாந்தகுமாரி, காலஞ்சென்ற யூட் ஆனந்தகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கிறிசோஸ்தம், குணதாசன், நட்சத்திரம், அலோசியஸ் தர்மராஜா, மேரி அஞ்சலீனா மற்றும் மேரி கிறிஸ்ரீனா, மாசறிப்போல், கென்றிக்கப்பர், பெர்னாண்டோ, யோகமலர், காலஞ்சென்ற பீற்றர் ஆகியோரின் மைத்துனியும், அலோசியஸ் வின்சனற், (ஓய்வு பெற்ற TA), அல்பேட் அற்புதராஜன் (யோகா செலக்சன், சுன்னாகம்), மார்ஷல் ஒக்கஸ் (ஓய்வு பெற்ற காகித ஆலை உத்தியோகத்தர், வாழைச்சேனை), மேரி டயானா (ஆசிரியர், ஆனைக்கோட்டை, றோ.க. பாடசாலை), யூட்சன் அன்ரனி (யூட்சன் பான்சி ஹவுஸ், யாழ்ப்பாணம்), வனைரீனா மொறீன் (DO - இறைவரித் திணைக்களம், வடமாகாணம்), அருட்பணி றொபின்சன் ஜோசப், அருட்சகோதரி விமலினி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுரேன் (NDB - செங்கலடி), டன்ஸ்ரன், சுஜிற்றா (ஏசியன் அசற் பினான்ஸ் - சுன்னாகம்), தர்சிகா, செவோன் (ஏசியன் அசற் பினான்ஸ், செங்கலடி), செஷான், யக்சன், (யூட்சன் பான்சி ஹவுஸ்), அருள்டா ஒலிவர், அக்னா, அக்ஷயா, ஜெனீவர், சலோனியா, அரிஸ்ரன், நான்சிகா, டொறிற்றா, அல்றிக் மற்றும் காலஞ்சென்ற மனோராஜ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (31.01.2024) புதன்கிழமை பிற்பகல் 03.00 மணிக்கு சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று, பூதவுடல் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.63, புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 249 8172, 077 290 6128


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## சட்டத்தின் பின்னுள்ள திட்டங்கள்

இலங்கை அரசாங்கம் அண்மையில் நாடாளுமன்றில் நிறைவேற்றியிருக்கும் நிகழ்நிலைக் காப்புச் சட்டம் உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்தில் விமர்சனங்களை ஏற்படுத்தியிருக்கின்றது. அரசாங்கத்துக்கு எதிரான குரல்களை அடக்கவே இந்தச் சட்டத்தை தற்போதைய அரசாங்கம் அவசர அவசரமாகக் கொண்டுவந்திருக்கின்றது என்று எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டுகின்றன. அதேநேரம், இந்தச் சட்டம் கருத்துச் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் என்றும், மனித உரிமை மீறல்க்ளுக்கு வழிகோலும் என்றும் சர்வதேச மட்டங்களில் சலசலப்புகளை ஏற்படுத்தியிருக்கின்றது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டம் இணையவழிக் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதையும், சிறுவர் - பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் கட்டுப்படுத்துவதையும் பிரதான நோக்கமாகக் கொண்டுள்ளது என்று அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் அந்தச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் சர்ச்சைக்குரியதாகவே இருக்கின்றன. இலங்கையில் அனைவருக்கும் சமமாகச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு ஏற்கனவே உள்ள நிலையில், தற்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள நிகழ்நிலைக் காப்புச் சட்டம் பழிவாங்கல் நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படலாம் என்ற அச்சம் மேலோங்கவே செய்கின்றது. நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் அடிப்படையில் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஐவர் கொண்ட ஆணைக்குழு தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது. அதிக அதிகாரங்களைக் கொண்ட இந்த ஆணைக்குழுவுக்கு எதிராக எந்தவித சிவில் அல்லது குற்றவியல் வழக்கையும் பதிவு செய்யமுடியாது. விடயத்தை உகந்த நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லவும் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு அதிகாரம் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு அதிக அதிகாரங்களைக் கொண்ட - ஜனாதிபதியால் நியமிக்கப்படும் ஆணைக்குழு எடுக்கும் தீர்மானங்கள் எவ்வாறானவையாக இருக்கும் என்பதை நிச்சயப்படுத்திக் கூறிவிடமுடியாது.

மக்கள் போராட்டத்தால் ராஜபக்ச ஆட்சி அகற்றப்பட்ட பின்னர், ஜனாதிபதிக் கதிரையைப் பற்றிக் கொண்ட ரணில் விக்கிரமசிங்க அதன்பின்னர் மக்கள் போராட்டங்களை - எதிர்ப்புகளை இரும்புக்கரம் கொண்டே அடக்கியிருந்தார். எதிர்ப்புப் போராட்டங்கள் படைப்பலத்தைப் பிரயோகித்து அடக்கப்பட்டதுடன், போராட்டங்களை ஒழுங்கமைத்த சிலர் மீது பயங்கரவாதத் தடைச் சட்டமும் பாய்ந்திருந்தது. 1979 ஆம் ஆண்டு 6 மாதங்களுக்குத் தற்காலிகமாகக் கொண்டுவரப்பட்ட பயங்கரவாதத் தடைச் சட்டம் தமிழர்களுக்கு எதிராக எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதையும் இந்த நாடு கண்டிருக்கின்றது - தற்போது பெரும்பான்மையின மக்களும் அதை உணர்கின்றனர். இந்தக் கடந்தகால அனுபவங்களே எதிர்காலத்தில் நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை அரசாங்கம் எவ்வாறு பயன்படுத்தும் என்ற கேள்வியையும் - அரசாங்கம் இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எடுக்கும் முனைப்பில் சந்தேகத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தில் உள்ள சர்ச்சைக்குரிய விடயங்களை - சட்டத்தின் மீது நாட்டிலும், சர்வதேசத்திலும் எழுந்துள்ள சந்தேகங்களைக் களைய வேண்டிய பொறுப்பு அரசாங்கத்துக்கு இருக்கின்றது - அதைச் செய்யாமல் சர்வாதிகாரப்போக்குடன் அரசாங்கம் செயற்பட முயன்றால் அது பாரதூரமான விளைவுகளையே உள்நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்தும். ஆனால் சர்வாதிகாரப் போக்குடன் செயற்பட்டு - பதவியைத் தக்கவைத்திருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவற்றையெல்லாம் கருத்தில் எடுப்பாரா என்பது சந்தேகம்தான்.




## குற்றங்களில் ஈடுபடுவோருடன் அரசியல்வாதிகளுக்குத் தொடர்பு

### அஸ்கிரிய மாநாயக்கர் குற்றச்சாட்டு

**கொழும்பு, ஜன.31**

**பாதாள உலகக் குழுக்களின் வன்முறை உட்பட சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுவோரில் பலர் அரசியல்வாதிகளுடன் தொடர்புள்ளவர்கள் என அஸ்கிரிய பௌத்த பீடத்தின் மாநாயக்கர் வரகாகொட ஸ்ரீ ஞானரதன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

குற்றவாளிகள் மேற்கொள்ளும் சமூக விரோதச் செயல்கள் தொடர்பான பொறுப்பில் இருந்து அரசியல்வாதிகள் விடுபட முடியாது.

போதைப்பொருள் என்ற பிணியில் இருந்து நாட்டை மீட்பதற்காக பொதுப் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், பதில் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் விசேட அக்கறையோடு செயற்பட்டு வருகின்றனர்.

அந்த இலக்கை அடைவதற்கு அனைவரும் அவர்களுக்கு உதவிகளை வழங்க வேண்டும் - என்றார். (எ-இ)

## மது உற்பத்தி நிறுவனங்கள் வரி ஏய்ப்பு

'வற்' வரியைச் செலுத்தாமல் தொடர்ச்சியாக வரி ஏய்ப்பு செய்யும் ஒன்பது மதுபான உற்பத்தி நிறுவனங்களுக்கு நிலுவைத் தொகையை உடனடியாக வழங்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களிடமிருந்து 720 கோடி ரூபா பெறப்படும் எனவும், இந்த நிலுவைத் தொகையை உடனடியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கலால் ஆணையாளர் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார். வரி செலுத்தாத இரண்டு நிறுவனங்கள் மீது ஏற்கனவே வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

## 639.4 பில். ரூபா அச்சிட்ட இலங்கை மத்திய வங்கி

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கை மத்திய வங்கி 69.6 பில்லியன் பணம் அச்சிட்டுள்ளது. அதேவேளை, கடந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையில் 639.4 பில்லியன் ரூபா அச்சிடப்பட்டது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (எ-இ)

## மரக்கறி விலை அதிகரிப்பு விசாரணை நடத்தவும்

சந்தையில் மரக்கறிகளின் விலை எதிர்பாராத வகையில் அதிகரித்துள்ளமை தொடர்பில் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ உடனடியாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டுமென தேசிய நுகர்வோர் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது. உள்ளூர்ச் சந்தைகளில் மரக்கறிகளின் விலை திடீரென அதிகரித்துள்ளமை தொடர்பாக வர்த்தக அமைச்சர் ஆராய்ந்து விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும். விலையை அதிகரிக்கும் வியாபாரிகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்றும் தேசிய நுகர்வோர் முன்னணி வலியுறுத்தியுள்ளது. (எ-இ)

## மரக்கறி விலை குறைய இரு மாதங்கள் செல்லும்

### விவசாய அமைச்சர் தகவல்

இரு மாதங்களில் மரக்கறிகளின் விலை இயல்புக்குத் திரும்பும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

கனமழையால் பயிர்ச்செய்கை அழிந்ததே மரக்கறி விலை உயர்வுக்குப் பிரதான காரணமாகும். விவசாயிகளுக்கு நாங்கள் வழங்கிய 'நெற் ஹவுஸ்' களில் பயிர் செய்ததால் ஓரளவு மரக்கறிகள் சந்தைக்கு வருகின்றன. எதிர்வரும் இரு மாதங்களில் மரக்கறிகளின் விலை இயல்புக்குத் திரும்பும் என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

**நாளை**

01.02.2024

**வியாழக்கிழமை**

**தை 18**

சுபநேரம் : 08.06 - 09.36

ராகுகாலம் : 02.06 - 03.36


**நாளொரு நல்வார்த்தை**

**குழந்தையின் முகத்தை நாம் எப்பொழுது பார்க்கின்றோமோ, அப்போது நாம் எதிர்காலம் பற்றி சிந்திக்கின்றோம்.**

**- டெஸ்மண்ட் டுட்டு -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



மலர்வு
14.02.1951

உதிர்வு
30.01.2024

## கார்த்திகேசு செல்லத்துரை

**(உரிமையாளர் - சோபனா நகை மாளிகை)**

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் நல்லூர் கோயில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட கார்த்திகேசு செல்லத்துரை அவர்கள் நேற்று (30.01.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராஜா பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சத்தியபாமாவின் அன்புக் கணவரும், அமரர் சுப்பிரமணியம், பரமேஸ்வரி, மகேஸ்வரி, இராசதுரை, அமரர் நகுலேஸ்வரி, இராசராணி, புஸ்பராணி, நளினிகலா, தயாபரன் மற்றும் செல்வராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும், சத்தியரூபன் **(சிறிநதியா நகை மாளிகை)** அவர்களின் அன்பு மைத்துனரும், நவநீதன் **(நியூ சிறிநதியா நகை மாளிகை, சிறிநதியா கலர் லாப்)**, ஸ்ரீலதா (ஆசிரியை, திருக்குடும்ப கன்னியர் மடம்), ஸ்ரீரேகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், திருநெல்வேலி சமுர்த்தி வங்கி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீநதியா, சஜீவ் **(சோபனா நகை மாளிகை)**, திருஆரூரன் (நகர அபிவிருத்தி அதிகார சபை) ஆகியோரின் மாமனாரும், ஷப்தமி, அனித்ரா, ஹனுமித்ரன், ஆஹர்சனன், ஆருத்ரா, ஆத்ரேயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2024) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**359/12, கோவில் வீதி,**
**நல்லூர்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**மகன், மைத்துனர்,**
**சிறிநதியா நகை மாளிகை.**
**077 2367 416**

JCR 416791 A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை



**"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"**

**பொருள்:** இறைவனுடைய திருவடிகளை பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது

- வள்ளுவர்



# இராவணன்: மாவீரம் பொருந்திய இலங்காதிபதி பற்றிய பார்வை

**இராமபுரத்தூர் நிஷாந்தன்**

இராமாயணம் எனும் இதிகாச இலக்கியத்தில் இழையோடும் முதன்மைமிகு பாத்திரக் கூறு இராவணன் என்றால் மிகையில்லை. கம்பரின் பாடல்களில் அதிகளவு பாடல்களின் வழியே சிறப்புப் பெறுபவன் இராவணன். அசுர குலத்தில் பிறந்திருந்தாலும் இலங்கையை ஆட்சி செய்த மன்னன் என்பதை இராமாயணம் சான்று பகிருகின்றது. மாவீரம் பொருந்தியவன், மூவுலகங்களையும் தன் வலிமையால் அடக்கி ஆட்சி புரிந்தவன், மேலும் மிகச் சிறந்த சிவபக்தன், வேதங்களை கற்ற வித்துவான், ஆயுர்வேதக் கலை கற்றவன், நவக்கிரகங்களையும் அடக்கி வைத்திருந்தவன், இப்படி பல சிறப்பம்சங்களைக் கொண்டிருப்பவனே இந்த இராவணன். இலங்காதிபதி, இலங்கேஸ்வரன், தசாநந்தன், இராவணேஸ்வரன், தசபதி, திரிலோகாதிபதி எனும் பல நாமகரணங்கள் கொண்டு அழைக்கப்படுகின்றான் இராவணன். இன்றும் இராவணன் ஒரு தமிழ் மன்னன் என்பதையும் அவன் சிறந்த முறையில் இலங்கையை ஆட்சி செய்தான் என்பதையும் இலக்கிய கருத்தாடல்கள் தெளிவுறுத்துகின்றன. இராவணன் குறித்த சில முக்கியமான குறிப்புகளை இங்கு காண்போம்.

### இராவணனின் பிறப்பு

பிரம்மதேவரின் வம்சத்தில் வந்த புலஸ்தியரின் பேரனாகிய விஸ்ரவ முனிவருக்கும், அசுர குலத் தலைவன் சுமாலியின் மகளாகிய கேகசிக்கும் மகனாகப் பிறந்தவனே இந்த இராவணன். இராவணனுக்கு கும்பகர்ணன், விபிஷணன் முதலிய சகோதரர்களும், சூர்ப்பணகை எனும் சகோதரியும் உடன் பிறந்தவர்களாவர். மேலும் குபேரன் என்பவன் இராவணனின் ஒன்றுவிட்ட சகோதரனாவான். அக் குபேரனிடம் இருந்தே இராவணன் புஸ்பக விமானத்தை கவர்ந்து கொண்டான் என்பது வரலாறு. இராவணனின் பட்டத்து ராணி மண்டோதரி. இராவணனுக்கும் மண்டோதரிக்கும் பிறந்த பிள்ளையே இந்திரஜித் என்பான். இந்திரனையே வென்ற மாவீரம் பொருந்திய மகன் அவன். மேலும் மண்டோதரியை தவிர மேலும் பல பெண்களை இராவணன் மணஞ் செய்திருந்தான் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### சிவபக்தன் இராவணன்

இராவணன் மிகச் சிறந்த சிவபக்தன் என்பதை அனைவரும் நன்கறிவர். அசுர குலத்தில் பிறந்திருந்தாலும் சிவபெருமான் மீது அளவு கடந்த பக்தி உடையவன். எந்நேரமும் சிவசிவ எனும் சிவனது நாமங்களை உச்சரிப்பவன். தன் நெற்றியில் திருநீற்றினை அணிந்திருப்பவன். தினமும் இலிங்கமூர்த்திக்கு அபிஷேகம் செய்பவன். இராவணது பக்தியின் உயர்ச்சியைக் கண்டு உளம் மகிழ்ந்த எம்பெருமான் ஈசன் ஒரு சக்தி வாய்ந்த வாள் ஒன்றினை அவனுக்கு அளித்தார். இவ்வாறு சிவபெருமான் மீது கொண்ட பக்தியினால் இறைவனின் ஆசியினால் இலங்காபுரியை சிறப்புற ஆட்சி செய்து வந்தான் இராவணேசன்.

### பிரம்மதேவரிடம் வரங்கள் பெறுதல்

இலங்காதிபதி இராவணன் பிரம்மதேவரை நோக்கி கடுந்தவம் புரிந்தான். இராவணனின் கடுந்தவம் கண்டு உளம் மகிழ்ந்த பிரம்மதேவரும் இராவணன் முன்பாக காட்சியளித்து விரும்பிய வரத்தினை வேண்டும்படி கூறினார். இராவணனும் பிரம்மதேவரே, நான் என் வலிமையினால் மூவுலகங்களையும் அடக்கி ஆள வேண்டும், மேலும் மும்மூர்த்திகள் மற்றும் தேவர்களும் எனக்கு கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும், இது தவிர மானிடரைத் தவிர்த்து மற்றைய உயிரினங்கள் எவற்றாலும் தனக்கு மரணம் சம்பவிக்கக்கூடாது எனப் பல வரங்களை வேண்டினான். பிரம்மதேவரும் இராவணன் விரும்பிய வரங்களை வழங்கினார். இங்கு ஒரு விடயத்தைக் கவனிக்க வேண்டும். மானிடர்கள் யாரும் தன் வலிமைக்கு இணையாகதவர்கள் எனக் கருதி மானிடரை ஒரு பொருட்டாகக் கருதாமல் அவர்களால் தனக்கு மரணம் ஏற்படக் கூடாது என வரத்தினை கேட்கவில்லை. இதுவே பின் இராவணனன் சாவுக்கு காரணமாகியது எனலாம். மானிட வடிவில் அவதரித்த இராமன் வாயிலாக இராவணன் சாவு சம்பவித்ததை நாம் அறிவோம் அல்லவா?

### கைலாயமலையைப் பெயர்த்தலும், சாம கானம் பாடி ஈசனை மகிழ்வித்தலும்

ஒரு முறை தன் தாயின் சிவ வழிபாட்டுக்காக எம்பெருமான் வீற்றிருக்கும் கைலாயமலையையே பெயர்த்தெடுக்க முற்பட்டான் இராவணன். சிவபெருமான் வீற்றிருக்கும் கைலாய மலையினை தன் புஜபல பராக்கிரம் கொண்டு பெயர்த்தெடுக்க முற்பட்ட இராவணன் செயல் கண்ட எம் பெருமான் கோபம் கொண்டு தன் கால் பெருவிரலால் இராவணனை அழுத்தினார். ஈசனது கால் பெருவிரலில் அழுத்தப்பட்ட இராவணன் அதிலிருந்து விடுபட முயற்சித்தான். ஆனாலும் அம் முயற்சி எதுவும் பயனளிக்கவில்லை. அவ்வேளை இராவணன் மனதில் ஒரு பொறி தட்டியது. எம்பெருமான் ஈசன் சாமகானப் பிரியன் என்பதை அறிந்த இராவணன் உடன் தன் சிரங்களில் ஒன்றையும், கரங்களில் ஒன்றையும் பிய்த்தெடுத்து அதை வீணையாக்கி அதில் சாமகானம் இசைத்தான் இராவணன். இராவணன் இசைத்த சாமகானத்தில் தன்னையே மறந்து போன எம்பெருமான் தன் கால் பெருவிரலை எடுத்துவிட்டார். இராவணனும் அதிலிருந்து தப்பித்துக் கொண்டான். இன்றும் இராவணன் சாமகானம் பாடி சிவபெருமானை மகிழ்விக்கின்ற காட்சியைப் புலப்படுத்தும் வகையில் ஆலயங்களில் மகோற்சவங்களில் கைலாசவாகனம் என்பதன் பயன்பாடு உள்ளதை காணமுடிகின்றது.



### இராமனோடு போர் புரிதல்

தன் தங்கையின் பொருட்டு இராமபிரானது மனைவி சீதையை கவர்ந்து வந்து இலங்கையின் அசோகவனத்தில் சிறை வைத்தான் இராவணன். சீதையை சிறை மீட்பதற்காக இராமன் வானர சேனையின் துணையோடு இலங்கைக்கு வந்து போர் அறைகூவல் விடுக்கின்றான். இதன் காரணத்தில் இராவணனது படை போரில் ஈடுபடுகின்றது. ஆனால் இராவணனது மாவீரம் பொருந்திய தம்பியாகிய கும்பகர்ணன் மற்றும், வீரமைந்தன் இந்திரஜித் உட்பட்ட மாவீரர்கள் எல்லோரும் இறந்து விடவே இறுதியில் இராவணனே போர்களம் புகுந்தான். தன் வீரமனைத்தையும் போர்க்களத்தில் வெளிக்காட்டி இராமபிரானோடு போர் புரிந்தான். ஆனால் இறுதியில் தன் மாவீரம் முழுவதும் இழந்து இராமனது அம்பு பட்டு போர்க்களத்தில் வீழ்கின்றான் இலங்காதிபதி.

### இலக்குவனுக்கு ஞான உபதேசம் வழங்கிய இராவணன்


இராமனோடு நடந்த போரில் தோல்வியுற்று சாவை அரவணைக்கத் தயாராகும் சமயத்தில் இராவணனுடைய அறிவுக்கண் திறந்தது. அவ்வேளையில் தான் இதுவரை காலமும் தான் புரிந்த அதர்மச் செயல்களை எல்லாம் எண்ணிப் பார்த்து தன்னைத் தானே நொந்து கொண்டான். அவ்வேளை இராமன் தன் தம்பி இலக்குவனனை அழைத்து இராவணனிடம் சென்று வாழ்வின் சாரத்தினை உபதேசமாய் பெற்று வருக எனக் கூறினான். அதன்படி இலக்குவனனும் இராவணனிடம் ஞான உபதேசம் வழங்கும் படி வேண்டி நின்றான். இறக்கும் தருவாயில் நா தழுதழுக்க இராவணன் இலக்குவனுக்கு உபதேசம் வழங்கினான். அவ்வாறு இராவணன் வழங்கிய உபதேசங்களில், நம் வாழ்வில் எந்த ஒரு சுப காரியத்தையும் காலம் தாழ்த்தாமல் உடனே செய்யவேண்டும், எப்போதும் நமது எதிரியை குறைவாக மதிப்பிடக்கூடாது எனவும், வாழ்வில் நம்மைப் பற்றிய இரகசியம் எதையும் எக்காரணம் கொண்டும் யாரிடமும் கூறக்கூடாது முதலிய ஞான உபதேசங்களை வழங்கினான்.

இவ்வாறு இராமாயணம் மட்டுமன்றி பல இலக்கியங்கள் வாயிலாக சிறப்புற இழையோடுகின்ற ஓர் அர்த்தபடிமமே இந்த இராவணன். ஓர் இலக்கியக் கதாபாத்திரமாக இலக்கிய வாசகர்களின் உள்ளங்களில் நீங்காத பாத்திரப் படிமமாக இராவணன் விளங்குகின்றான் என்றால் அது மிகையில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரடி போல் நாலடியும் எம்மவரைக் காக்குமடி

கே.எஸ்.சிவஞானராஜா




கணவனை இழந்த குடும்பங்களுக்கும், மாற்றுத்திறனாளிகளுக்கும், நோயாளிகளுக்கும் செல்வம் பயன்படும்படியாக எம்மனதில் விழிப்புணர்வு ஏற்படவேண்டும். வசதியுள்ளவர்களுக்கே பெரும்பாலும் தானம் செறிவதாக இந்த மண் வருத்தம் தெரிவிக்கிறது. வறுமையில் வாடுபவர்களுக்கே தருமம் பேறாக வேண்டும். சிந்தனைசெய் மனமே!

## துறவு

மனிதனானவன் ஐம்பொறிகளினூடாக வரும் ஆசையை அடக்கி, நல்வபுலன் வழிபயணிப்பதற்கு வழிபுரிவதே துறவின் பக்குவமாகும். துறவின் வழிநின்று வெளிப்படையாக இயங்க மறுப்பவர்கள் உறவைத் தேடுவதிலும் பின்னிற்கமாட்டார்கள். இடையூறுகள் எதுவந்தபோதும் துறவு நிலை ஒருபோதுமே தடைபோவதில்லை. காமம், மோகம், தாகம், பிற்மனை இவையெதுவுமே துறவிகளைத் தீண்டுவதில்லை. மாறாகத் துறவிகள் இவற்றைத் தீண்டினாலொழிய அவை தூரவிலகி துறவுக்குத் தகவு சேர்க்கும்.

ஈரடி என்பது திருக்குறள். நாலடி என்பது நாலடியார். இவையிரண்டும் மனித வாழ்வைச் செப்பனிடும் புனிதமான நூல்களாகும் இன்னும் சொல்வதானால் ஒவ்வொரு மனித மனங்களையும் துப்புரவு செய்யும் ஒப்புரவு நூல்களாகும். அறிவுப் பொக்கிசங்கள் காலக்கண்ணாடிகள், ஒளிவிளக்குகள் இத்தகு பேண்களையுடைய இந்த நூல்கள் இரண்டும் அறம்,பொருள், இன்பத்தை அள்ளி வழங்குபவன.

திருக்குறள் 133 அதிகாரங்களைக் கொண்ட 1330 குறள்களினால் பேறளிப்பது போல, நாலடியாரும் (40) நாற்பது அதிகாரங்கள் கொண்ட (400) நானூறு பாடல்களினால் நாம் வாழ எம்மைக் காக்கிறது. இதனைத் தனியாக ஒரு புலவர் பாடியதில்லை. பல புலவர்கள் செய்தார்கள் என்றும் 'பதுமனார்' இதனைத் தொகுத்தார் என்றும், தருமர் உரை கண்டார் என்றும் அறிய முடிகிறது. அடியார்க்கு நல்லார், இளம்பூரணர், பரிமேலழகர் மூவரும் நாலடியாரை மேற்கோள் காட்டியிருப்பது நூலுக்கு அழகு சேர்க்கிறது. அது மட்டுமல்ல, மகிமையும் கிடைக்கிறது.

"எண் பொருள் குன்றத்து எண்ணாயிரம் இருடி
பண் பொருந்தப் பாடியபா நானூறு"

வறுமை காரணமாகப் பாண்டிநாட்டில் தஞ்சமடைந்த எண்ணாயிரம் சமணர்கள் தத்தம் நாடு திரும்ப முன்பாக, இரவோடு இரவாகப் பாடிய எண்ணாயிரம் பாடல்களில் காலத்தால் அழியாத எஞ்சியவையே இந்த நானூறு பாடல்களுமாகும் என்பது வரலாறு இதன் சாராம்சமாக இந்தக்கட்டுரை அமைகிறது.

## சிறப்பு

"ஆலும்வேலும் பல்லுக் உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி"

நாலடியாரும், திருக்குறளும் சொன்னபடி வாழ்வோமாக இருந்தால் அதுவே வாழ்வின் பேறாகும். பாமரமக்களிடம் கொண்டு செல்லப்படவேண்டிய தேவையைத் தற்காலம் சுமந்துகொண்டே வருகிறது. பண்டிதர்களின் துணையின்றி எளிமையாகப் புரிந்துகொள்ள ஆவன செய்யும்போது ஈரடியும், நாலடியும் இந்த மண்ணில் பொன்போல விளையும் என்பதைப் பெரும் பெரும் பட்டங்களை முன்னுக்குப் பின் சுமப்பவர்கள் புரிந்துகொள்வது தமிமுக்கும், தமிழர்க்கும் விடிவைத் தரும்.

## பேறு

நான்கடிகளையுடைய நேரிசை வெண்பாவும் இன்னிசை வெண்பாவும் கொண்டதாக கி.பி. 250ஆம் ஆண்டில் இயற்றப்பட்டதே நாலடியார். மேலும் அறம் 13 அதிகாரங்கள். பொருள் 26 அதிகாரங்கள். காமம் ஓர் அதிகாரம் என மொத்தம் 40 அதிகாரங்களில் 400 பாடல்கள் உள்ளன. வானவில் போன்ற இவ்வுலக வாழ்க்கை தோன்றி மறையும் தன்மையது. எனவே பரம்பொருளை வணங்கி, வாழ்த்தி வாழ்வாங்கு வாழ்தலே இந்தப் பிறவியின் நோக்கமாகும் என்பதை நாளும் பொழுதும் வரமாக்குவோமாக.

## அறத்துப்பால்

செல்வம் யாருக்கும் நிலையாக இருப்பதில்லை. நீடித்து இருப்பதுமில்லை. வண்டியின் சக்கரம்போல சுழன்று செல்லக்கூடியது

'யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்'

எனவே இயமன் வருவதற்கு முன்னதாக இல்லாதவர்களுக்குச் செல்வம் பன்படவேண்டும். இலங்கையில் வீட்டிலே குசினி அடுக்களை உண்டு. மனைவி உண்டு. பிள்ளைகள் உண்டு எல்லாப்பொருள்களும் உண்டு. உருப்படியாக உடம்பும் புஸ்டியாக உண்டு. மருந்துகளும் உண்டு. வங்கியில் பணமும் உண்டு. பொறுமையாக இருந்து சமைக்கப் பஞ்சி என்பதற்காக, வீட்டையும், படலையும் பூட்டி வாகனத்தையும் பூட்டி பொதுப்பசி ஆற வேண்டுமா? இது அறமல்ல. முதலில் இல்லாதவனை வரையறை செய்யவேண்டும். பாத்திரமறிந்து பிச்சை கொடுங்கள். இதுதான் தர்மம். அன்னத்தை அளந்து பக்குவமாக இடுங்கள். அவசரப்பட்டு அள்ளிக்கொட்டிச் சிந்தி அநியாயம் செய்யாதீர்கள். வாழையிலையில் படைக்கப்போடுவதாக இல்லாமல் அளவாக வயது தெரிந்து பேறாக இடுவதே தர்மமாகும்.

உல்லாசப் பயணிகளையும் பொழுதுபோக்க வந்தவர்களையும், கண்கடைதெரியாதவர்களையும், காதல் ஜோடிகளையும் போதையில் நிறைந்தவர்களையும் வில்லங்கமாகக் கூப்பிட்டு அன்னதானம் செய்வது அதர்மமாகும். உண்மையாகவே தொண்டு செய்பவர்கள் யாராக இருந்தாலும் தர்மத்தின் கரங்கள் அவர்களுக்காய் நீள நெருங்கி உதவுவதாக.

## இளமை நிலையாமை

செல்வம் நிலையாமையை அடுத்து இளமையும் நில்லாது. இளமையை வென்று முதுமையும் நெருங்கி வந்துவிடும். பிறகென்ன? கோல் ஊன்றித் தள்ளாடி சோபையிழந்து இறைவனிடம் மன்றாடுவர். இளமையில் கண்கடை தெரியாமல், தானே உலகமென்று முனைப்புடன் செயற்படுவர் பின்னர் பையப் பைய தளர்ந்து ஒதுங்குவர். முன்வரிசையில் இருக்க ஆசைப்பட்டவர்கள் தானாகவே பின்வரிசையில் இருக்க உடலும் உள்ளமும் கெஞ்சிக்கொள்ளும்.

"சொல்தளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையினராய்ப்
பல் கழன்று பண்டம் பழிகாறும் - இல்செறிந்து
காம நெறிபடூம் கண்ணினார்க் கில்லையே
ஏம நெறிபடூம் ஆறு"

தத்தம் மனைவியிடம் சேர்ந்து சிற்றின்பம் அனுபவிப்பதையே கண்ணாக இருக்கும் கயவர்களுக்கு முதுமையின் தாக்கம் எப்படியாகும் என்று உணர முடிவதில்லையே. எனவே இப்போது முதற்கொண்டு பேரின்ப வாழ்க்கைநெறியில் பயணிக்க முயற்சிப்போமாக. இதற்கு அறவாழ்வொன்றுதான் தக்க பரிகாரமாகும்.

## யாக்கை நிலையாமை

முடியுடை மன்னர்களும் காலப்போக்கில் மாண்டு போவார்கள். திருமணம் நடக்கும்போது மங்கலவாத்தியம் முழங்கும் சிலகாலம் சென்றபின் அமங்கல ஒலி கேட்கும் இதனைப் புரிந்து இளமையிலேயே இயன்ற அறம் செய்யவேண்டும்.

உயிரானது உடலிலிருந்து விடுபட்டுப்புறப்பட்டுச் சென்ற பின்னர் அலங்காரம் செய்தென்ன? அடக்கம் செய்தாலென்ன? எரித்தால் என்ன? நிலப்பாவாடை விரித்தென்ன? விளம்பரம் செய்தாலென்ன? இதனால் உடலுக்குப் பெருமையும் இல்லை. சிறுமையும் இல்லை. நெருப்பும் மண்ணும் தாமே அனுபவித்துண்ணும்.

தம்மையொருவர் இகழ்ந்து உரைத்தபோது பொறுத்துக்கொள்வது மட்டுமல்ல அவ்வாறு இகழ்ந்தவர் தனது யாக்கை நிலையாமையை உணராத நிலையில் அடுத்த பிறவியிலும் வருந்தப்போகும் நிலைகண்டு பெரியோர்கள் தமது நிலையாமையின் அறிவினால் உயர்ந்து நிற்பர்.

## சினமின்மை

கோபம் கொண்ட ஒருவன் நாவடக்கம் கெட்டு வெடுக்கென்று கூறிய கோபச் சொல் எக்காலத்திலும் அதுசொன்ன அவனையே வருந்தியே தீரும். எனவே ஞானமுடையவர்கள் எத்தகைய குறுக்கீடுகள் வந்தாலும் சினந்து எரிந்து கோபமொழிகளைக் கூறவேமாட்டார்கள். நாகபாம்பானது மந்திரவாதிக்குக் கட்டுப்பட்டு இருப்பது போல, பெரியோர்களும் ஏதுவான கட்டுப்பாட்டினால் மனித விழுமியங்களைப் பாதுகாத்து வாழ்வார்கள்.

நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி
கெடுங்காலம் இன்றிப் பரக்கும் - அடுங்காலை
நீர் கொண்ட வெப்பம் போல்தானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

## சான்றோர் கொண்ட கோபம் தணிந்துவிடும்

மிகுந்த கோபத்துடன் தம்மைக் கடித்த நாயைக் கூடப் பதிலுக்குக் கடிப்பார் யாரும் இல்லையே. அதுபோல இழி சொற்களைப் பேசித் திட்டியவர்களைக்கூட உயர்ந்தவர்கள் பதிலுக்கு இழிவான சொற்களைப் பேசித் திட்டமாட்டார்கள்.

## ஆகாரம் ஆற்றினும் உபகாரம் செய்வாய்

பொறையுடைமையே ஞாலத்தில் மிகப் பெரிதாகும். அறிவில்லாதவன் முறைதவறிப் பேசுவான். ஆதலால் நீ விலகியிருப்பாயாக. அதுவே உனக்குப் பெருமை. அன்புடையவர் கூறும் கடுஞ்சொல்லும் நன்மை பயக்குமே. தான் கெட்டாலும் சான்றோர் கெடுமாறு எண்ணவே கூடாது.

பந்தம் பிடித்துப் பதவிக்கு வந்தவர்கள்
தத்தம் வாயால் தாமே கெட்டுக்கொள்வார்கள்.

## பிறர்மனை நயவாமை

அறம், புகழ், கேண்மை, பெருமை இந்நான்கும்
பிறன் தாரம் நச்சுவார்ச் சேரா - பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகை, பழி, பாவம் என்று
அச்சத்தோடு இந்நாற் பொருள்.

அறிஞர்களிடம் காமநோயானது பரவாது. அறிஞர்கள் போல் பாசாங்கு செய்பவர்களிடம் இந்த நோய் மறைந்துள்ளது. நெருப்பிலிருந்து கூடத் தப்பித்துக்கொள்ளலாம். ஆனால் காமநோயோ அதனை நீ மறைத்தாலும் அது உன்னைக் கணம் கணம் வாட்டிக் கொண்டே இருக்கும். எனவே, பட்டது போதும். அதிலிருந்து விடுபடுவாயாக. நாலடியார் கட்டாயமாக, பாடத்திட்டங்களில் புகுத்தப் படவேண்டும். மேலும் நாலடியாரில், ஈகை, பழவினை, மெய்மை, தீவினையச்சம், கல்வி, குடிப்பிறப்பு, மேன்மக்கள், பெரியாரைப் பிழையாமை, நல்லினக்கம் சேர்த்தல், பெருமை, தாளாண்மை, சுற்றம் தழால், நட்பாராய்தல், நட்பில் பிழை பொறுத்தல், கூடாநட்பு, அறிவுடைமை, அறிவின்மை, நன்றியில்செல்வம், ஈயாமை, இன்மை, மானம், இரவச்சம், அவையறிதல், புல்லறிவாண்மை, பேதைமை, கீழ்மை, கயமை, பன்னெறி, பொது மகளிர், கற்புடை மகளிர், காமநுதலியல் ஆகிய அதிகாரங்கள் படிக்குந்தோறும் எம்மையும், எம் வாழ்வையும், எம் குடும்பத்தவரையும், எம் உறவுகளையும் என்றும் பாதுகாப்பனவாய் படைக்கப்பட்டுள்ளன. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுரகுமாரவுக்கு ஆபத்து பாதுகாப்பை பலப்படுத்துக!



நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்கவின் வெற்றி உறுதியாகியுள்ளதால், அவருக்கான பாதுகாப்பைப் பலப்படுத்த வேண்டும் என்று ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது. ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:-

வெற்றியில் எமக்குச் சந்தேகம் கிடையாது. ஆனால் இந்த எட்டு மாத காலப்பகுதிக்குள் இவர்கள் ஏதேனும் துருப்பை அடித்து, ஜே.வி.பி.யின் வெற்றியைச் சீர்குலைக்கக் கூடும், எனவும் மக்கள் எமக்குக் கூறிவருகின்றனர். முடியாத பட்சத்தில் இவர்கள் அநுரவுக்கு எதையாவது செய்யக்கூடும், அப்படிப்பட்ட தரப்புத்தான் அந்த அணிகளில் அரசியல் செய்கின்றன. அநுரவை பாதுகாக்குமாறு மக்கள் கோரிவருகின்றனர் - என்றார். (ம-44)


## பெயர் மாற்றம்

[illegible] வசிக்கும் கந்தப்பு பன்னீர் செல்வம் ஆகிய நான் எனது பெயரை கந்தப்பு பன்னீர் செல்வி என மாற்றம் செய்துள்ளேன். இனிவரும் சகல ஆவணங்களிலும் கந்தப்பு பன்னீர் செல்வி என்ற பெயரிலேயே [illegible] சகல தரப்பினருக்கும் அறியத்தருகின்றேன்.

-கந்தப்பு பன்னீர் செல்வி-

## காணி விற்பனைக்கு

நீர்வேலி, பருத்தித்துறை பிரதான வீதியில் இருந்து 100m இல் 2 1/4 பரப்புக் காணி 3 பக்க மதிலுடன், நன்னீர் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

076 388 8103


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24 . 03 . 1960

உதிர்வு 22 . 01 . 2014

### அமரர் சரஸ்வதி ஜெயநாதன் (பேபி அன்ரி)

முன்னாள் பொது முகாமைத்துவ உதவியாளர் (தேர்தல்கள் திணைக்களம், கச்சேரி யாழ்ப்பாணம்)

திதி - அபரபக்க சஷ்டி - 31.01.2024 - புதன்கிழமை

அன்புடன் அரவணைத்து வையத்துள் வாழ்வாங்கு வாழ
ஆண்டுகள் பத்து ஆனதம்மா பேபி
மாறிலத்தில் உமைப்பிரிந்து இன்னும் தீராத துயரத்தில்
இருக்கிறோம் நாம் இங்கு எமையெல்லாம்
தவிக்கவிட்டு இமைகளை மூடி விட்டீர்களே பேசி
தினம் தினம் உம்மை யெண்ணி தவிக்கின்றோம்
என்றாலும் எம்முடன் இருப்பீர்கள் என்ற
தைரியத்தில் வாழ்கின்றோம் பேபி அன்ரி
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

அல்லாரை வடக்கு
கொடிகாமம்
077 515 3466

உங்கள் பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.
31.01.2024

## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 06 . 1947

மறைவு 27 . 01 . 2024

### பிலிப்பையா பிரான்சிஸ் (செல்வரட்ணம்)

[illegible] பிறப்பிடமாகவும் [illegible] வீதி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்பையா - பிரான்சிஸ் கடந்த 27.01.2024 சனிக்கிழமை காலமானார்.


[illegible]

அன்னாரின் [illegible] நாளை (01.02.2024) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் [illegible]

தகவல்:
மகன் - 077 648 0799
மகன் - 076 582 2987
மருமகன் - 077 392 0797
077 935 2563

ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

## 31 ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



மலர்வு 21 . 05 . 1959

உதிர்வு 01 . 01 . 2024

கடந்த (01.01.2024) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### பொன்னுத்துரை மனோரஞ்சிதன் (ரஞ்சன்)

(முன்னாள் சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர், லக்சுமி போட்டோ - சுன்னாகம்)

"கண்முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர்வாழும்"

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (31.01.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அன்றைய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் குடும்பம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

சோடாக் கொம்பனி லேன், [illegible] குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



தோற்றம் 30 . 09 . 1940

மறைவு 30 . 01 . 2024

### இரத்தினேஸ்வரி புனிதசீலன் (இராசாத்தி)

(ஓய்வுநிலை உபஅதிபர் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினேஸ்வரி புனிதசீலன் அவர்கள் நேற்று (30.01.2024) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், புனிதசீலனின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான டாக்டர் இராஜதுரை, இரட்னசிங்கம், இராஜேஸ்வரி மற்றும் துரைசிங்கம் (கனடா), திரவியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தாரணியின் (இரசாயனவியல் ஆசிரியர், வட்டு இந்துக் கல்லூரி) அன்புச் சிறிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்றையதினம் (30.01.2024) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்தில் நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## சுப்பிரமணியம் மகேந்திரராஜா

(படையப்பா - சிவன் ரவல்ஸ் உரிமையாளர்)

பிறப்பு 09.12.1960 இறப்பு 11.02.2023

ஓராண்டு சென்றதுவாம் அப்பா நீங்கள்
எம்மை விட்டுப் பிரிந்து...
இன்னும் எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
ஏற்றுக்கொள்ள முடியாதப்பா உம் பிரிவை...
தாய், தந்தை வரிசையில் தாய்க்குத்தான் முதலிடமாம்
யாருக்கும் தெரிந்திராது நீங்கள் தான் எம்
தாயுமானவன் என்று...
ஆறுதல் சொல்ல ஆயிரம் உறவிருந்தும்
அநாதையைப் போலவே உணருகிறோம் அப்பா...
எம் உச்சரிப்பு அகராதியிலிருந்து அப்பா என்றசொல்
உதிர்ந்து போனதை உணருகிறோம் அப்பா...
கலிகால உலகில் சாத்தியமிருந்தால் மீண்டும்
ஒரேயொரு முறை எம்மிடம் வந்துவிட்டு
போகமாட்டீர்களா அப்பா...
அடுத்த ஜென்மத்திலும் எம் அப்பனுக்கே
பிள்ளைகளாய் பிறக்கும் வரம் வேண்டும் அப்பா...

தொட்டிலடி,
சங்கானை.

(cs.53780) (N-1)

பிரிவால் வாடும்
குடும்பத்தினர்

---

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 • 07 • 1935

மறைவு 11 • 02 • 2013

அமரர் திரு. சின்னையா
சிவசுந்தரம் (சுந்தரம் பத்தர்)

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 25 • 07 • 1945

மறைவு 13 • 03 • 2009

அமரர் திருமதி
அகிலாண்டேஸ்வரி சிவசுந்தரம்

தண்ணீரூற்று மேற்கு, முள்ளியவளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரு.சி.சிவசுந்தரம் (சுந்தரம் பத்தர்) அவர்களின் 1 ஆம் ஆண்டு நினைவுதினமும், திருமதி சி. அகிலாண்டேஸ்வரி அவர்களின் 15 ஆம் ஆண்டு நினைவுதினமும் இன்று (31.01.2024) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னார்களின் இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னார்களது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

தண்ணீரூற்று மேற்கு,
முள்ளியவளை, முல்லைத்தீவு.

குடும்பத்தினர்.
077 943 9333

(cs.41673) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகாத்மா காந்தியின் சிராத்த தினம்

யாழ்ப்பாணம், ஜன. 31
மகாத்மா காந்தியின் 76ஆவது சிராத்த தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்றன.
யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் காந்தி சேவா நிலையத்தினரின் அனுசரணையுடன் யாழ். மருத்துவமனை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலை முன்றிலில் நிகழ்வுகள் இடம்பெற்றன.
நிகழ்வில் மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு, திருவுருவப்படத்துக்கு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.
இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகள், யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர், காந்தி சேவா நிலைய உறுப்பினர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். காந்தியம் காலாண்டுப் பத்திரிகையும் இதன்போது வெளியிடப்பட்டது. (ம-27)

# உற்சவம் இன்று

யாழ்ப்பாணம், ஜன. 31
வடமராட்சி துன்னாலை வடக்கு நவிடான்பதி மனோன்மணி சக்தி சமேத காளியாம்பாள் தேவஸ்தான முதலாவது அலங்கார உற்சவம் இன்று புதன்கிழமை ஆரம்பமாகி பத்து நாள்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ளது.
அந்த வகையில் எதிர்வரும் இரண்டாம் திகதி வெள்ளிக்கிழமை மாலை சுமங்கலி பூஜையும், மூன்றாம் திகதி சனிக்கிழமை மாலை மஞ்சத் திருவிழாவும், நான்காம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை குடமுழுக்கு உற்சவமும், ஐந்தாம் திகதி திங்கட்கிழமை மாலை பூங்காவனத் திருவிழாவும், ஆறாம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் வேட்டைத் திருவிழாவும், ஏழாம் திகதி புதன்கிழமை இரவு சப்பரத் திருவிழாவும், எட்டாம் ஆம் திகதி வியாழக்கிழமை காலை இரதோற்சவமும், ஒன்பதாம் திகதி வெள்ளிக்கிழமை காலை தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளது. (ம-100)

**கட்டடம் வாடகைக்கு**
யாழ்/ வைத்தியசாலை வீதியில் கட்டடம் வாடகைக்குண்டு.
கடைகள் / அலுவலகங்களுக்கு ஏற்றது.
**077 162 0626**

**PROCUREMENT NOTICE**
**SRI LANKA GERMAN TRAINING INSTITUTE - KILINOCHCHI**
**Ministry of Education**
**Skills Development, Vocational Education, Research & Innovations Division**

SLGTI SRI LANKA GERMAN TRAINING INSTITUTE KILINOCHCHI

**Invitation for Bids (IFB)**

The Chairman Department Procurement Committee on behalf of Sri Lanka German Training Institute (SLGTI) now invites sealed bids from eligible and qualified bidders for the following services at SLGTI — Kilinochchi.

| Description | Non-Refundable Fee |
|---|---|
| 1. Cleaning and Gardening Service | Rs: - 5000.00 |
| 2. Water Treatment Plant service and Maintenance | Rs: - 3000.00 |

2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB)
3. The Bidders having similar experience in supply of above service for at least five years shall be eligible to apply.
4. Interested eligible bidders may obtain further information from the office of the Accountant, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi, and inspect the bidding documents at the address given above from 01/02/2024 up to 29/02/2024 during 09:00 to 15:00 on working days. Tel: 021/2060137, Fax: 021-2060138.
5. Qualification requirements are included in the Bidding Documents.
6. A complete set of Bidding Documents in English language for each tender can be collected by interested Bidders on submission of a written application to Accountant, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi from 01/02/2024 up to 29/02/2024 during 09:00 to 14:00 on working days upon payment of a non-Refundable fee.
7. Sealed Bids for each tender shall be delivered separately in **ORIGINAL** and **COPY** address to the Chairman Department Procurement Committee, Sri Lanka German Training Institute (SLGTI), Ariviyal Nagar, Kilinochchi on or before 2.00pm on 29/02/2024. Bids will be opened soon after the closing in the presence of the bidder/ bidders' representatives who choose to attend. Late Bids will be rejected / not accepted.
8. The Bids must be valid for three months from the date of bid closing.
9. Procurement Committee has the right to reject all the bids, part of the bids or cancel the entire tender. Further, they reserve all the rights with respect to the procurement.
10. All bids shall be accompanied by a Bid security of 5% of the bid value excluded taxes.
11. 11.For further clarifications contact (Director/Principal TP:-0714904552,Registrar T.P:-0716182345)


Director/Principal,
Sri Lanka German Training Institute (SLGTI),
Ariviyal Nagar,
Kilinochchi.

யாழ்.அரியாலை வெட்டுக்குளம்
அருள்மிகு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தான
**1008 சங்காபிஷேக பெருவிழா**



சோபகிருது வருடம் தை மாதம்
17 ஆம் நாள் 31.01.2024 புதன்கிழமை

கலைமகளே கற்றவர்கள் கருதி னிறைபவளே
அலைமகளே வெட்டுக் குளத்தரசி மலைமகளே
புன்னெறி செல்லும் புழுத்தலைப் புலையனேற்கு
நன்னெறியே யென்றுநிலை நாட்டு



அம்பிகை அடியார்களே!
நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் தை மாதம் 17 ஆம் நாள் (31.01.2024) புதன்கிழமை தேய்பிறை பஞ்சமி திதியும் அத்தநட்சத்திரமும் கூடிய சுபவேளையில் அம்பாளுக்கு ஆயிரத்தெட்டு சங்காபிஷேகம் செய்ய திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அனைத்து கிரியைகளிலும் அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு அம்பிகையின் அருட்கடாட்சத்தைப் பெற்றுக்கொள்வீர்களாக.

**கிரியாகால நிகழ்வுகள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ◆ காலை | 6.00 | மணி | பூசை | மாலை | 5.30 | மணி | விஷேட பூசை |
| ◆ காலை | 8.00 | மணி | புண்ணியவாசம் | மாலை | 6.00 | மணி | வசந்த மண்டபூசை |
| ◆ காலை | 8.30 | மணி | யாகபூசை | மாலை | 6.20 | மணி | திருவூஞ்சல் |
| ◆ காலை | 9.30 | மணி | அபிஷேக பூசை | இரவு | 7.20 | மணி | அம்பாள் கிராமப் பிரவேசம் |
| ◆ காலை | 11.00 | மணி | சங்காபிஷேகம் | நள்ளிரவு | 12.00 | மணி | பிராயச்சித்த அபிஷேகம் |
| ◆ காலை | 11.30 | மணி | விஷேட பூசை | | | | |

அதனைத் தொடர்ந்து மதியம் இடம்பெறும் மாகேசுவர பூசையிலும் அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்

ஆலய அர்ச்சகர்
பிரம்மஸ்ரீ சண்முகமாதுளசர்மா

சிவாஹம கிரியா ஜோதி
சிவஸ்ரீ கிருபாகரக் குருக்கள் (முள்ளியவளை)

அம்பாளின் கிராமப் பிரவேச வீதியுலா நடைபெறும்

"இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க"

தேவஸ்தான பரிபாலன சபையினர்
அரியாலைவெட்டுக்குளம் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்.

பிரசுர அன்பளிப்பு:
புலம் பெயர் வாழ் இத்திமரத்தாள் புத்திரர்கள் திருப்பணிச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைக்கு கடத்தவிருந்த ஏலக்காய் மீட்கப்பட்டன!

இலங்கைக்குக் கடத்தப்படவிருந்த பெருந்தொகை ஏலக்காய் தமிழகத்தில் மீட்கப்பட்டுள்ளது. மண்டபம் பொலிஸாரால் ஏலக்காய் மீட்கப்பட்டுள்ள நிலையில் அவற்றைக் கடத்த முற்பட்டனர் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் தேடப்பட்டு வருகின்றனர். 43 கிலோ ஏலக்காயே மீட்கப்பட்டுள்ளது. அவற்றின் பெறுமதி சுமார் 5 இலட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(ம-56)


# விலைக் கேள்விக்கான கோரல்

## சபை நிதி - கட்டம் - I

## வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி)

1. வலி வடக்கு பிரதேச சபை சார்பாக உள்ளூர் அதிகார சபை பெறுகைக் குழுவின் தலைவர் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்றவருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து மூடப்பட்ட கடித உறையில் விலைக் கேள்விகளைக் கோருகின்றார்கள்.
2. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி நடைமுறையின் மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்வியாளர்கள், நிர்மாணத் தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (**CIDA**) பதிவு பெற்ற கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினை பதிவு செய்யப்பட்டிருப்பதுடன் கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக் கேள்வி ஆவணத்தில் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் மேலதிக தகவல்கள் விலைக் கேள்வி ஆவணத்தில் **Schedule** (பகுதி 5) இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. (SBD -03)
5. அக்கறை கொண்டுள்ள விலைக் கேள்வியாளர்கள் கீழே **6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில்** மேலதிக தகவலைப் பெறலாம் என்பதுடன் அம் முகவரியில் மு.ப **9.00** மணியிலிருந்து பி.ப **3.00** மணிவரை அலுவலக நாட்களில் விலைக்கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை **செயலாளர், வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை - கொல்லன்கலட்டி, (தொலைபேசி இல: 021-2241130, தொலை நகல் 021-2243688) எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை 2024.01.31 – 2024.02.14 காலப்பகுதியில் மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணி வரையில் சமர்ப்பித்து** ரூ.3000.00 மீளளிக்கப்படாத தொகையினை பணமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. விலைக்கேள்விகள் (மூலம்,பிரதி) **2024.02.14ம்** திகதி 14.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **தலைவர், உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு, வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லன்கலட்டி) எனும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும்.** காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும்.
8. விலைக் கேள்விகள், **2024.02.15** அன்று **மு.ப 10.00** மணிக்கு மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக்கப்படும்.
9. விலைக்கேள்விக்கு முன்னரான கூட்டம் மேலே 6ல் குறிப்பிடப்பட்ட முகவரியில் **பி.ப 2.30** மணிக்கு **2024.02.07** அன்று நடைபெறும்
10. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப்பொறுப்பு இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| இல | கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப் பீட்டுத் தொகை (ரூ. மில்லியன்) | ஒப்பந்த காலம் | தேவையான தரம் | கேள்வி சமர்ப்பிக்கப் படும் திகதியிலிருந்து கேள்விசெல்லுபடியாகும் | | கேள்விப் பிணைவிபரம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | காலம் | திகதி | தொகை (ரூ) | தேவைப்படும் காலம் |
| 01 | NP/14/41(14)/05/02/ 291/CF-01/2024 | வீதி புனரமைத்தல், நாதோலை சனசமூக நிலைய முன்வீதி - இளவாளை வடமேற்கு | 0.490 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மானம் | 49 நாட்கள் | 02.04.2024 | 5,000.00 | Till 30.04.2024 |
| 02 | NP/14/41(14)/05/02/ 292/CF-02/2024 | வீதி புனரமைத்தல் கிராமசெயலக வீதி – தம்மளை, அளவெட்டி மேற்கு. | 0.655 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மானம் | 49 நாட்கள் | 02.04.2024 | 7,000.00 | Till 30.04.2024 |
| 03 | NP/14/41(14)/05/02/ 293/CF-03/2024 | வீதி புனரமைத்தல் மாம்பிராய் வீதி - கட்டம் - II காங்கேசன்துறை மத்தி | 1.750 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மானம் | 49 நாட்கள் | 02.04.2024 | 18,000.00 | Till 30.04.2024 |
| 04 | NP/14/41(14)/05/02/ 294/CF-04/2024 | வீதி புனரமைத்தல், கலைச் செல்வி வீதி - கட்டம் - II தெல்லிப்பளை கிழக்கு | 2.585 | 60 நாட்கள் | C9 & C8 வீதி நிர்மானம் | 63 நாட்கள் | 16.04.2024 | 26,000.00 | Till 14.05.2024 |
| 05 | NP/14/41(14)/05/02/ 295/CF-05/2024 | மோட்டர் அறைகள் அமைத்தல்- மயிலிட்டி உப அலுவலகம், சீராவளை சேதனப்பசளை உற்பத்தி நிலையம் | 0.749 | 60 நாட்கள் | C9 & C8 கட்டட நிர்மானம் | 49 நாட்கள் | 02.04.2024 | 8,000.00 | Till 30.04.2024 |


**"விலைக்கேள்வியானது தேசிய போட்டி விலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும். இக் கொள்வனவின் மூலம் நடாத்தப்படும் வேலைக்கான மதிப்பீட்டுத்தொகை (VATமற்றும் வேறுவரிகள்) 50மில்லியனினுள் இருப்பின், பிராந்திய முன்னுரிமைமற்றும் CIDA தர முன்னுரிமை என்பன பொதுநிதிச் சுற்றறிக்கை இல 04/2016(iii) மற்றும் பின்னூட்டல் இல் குறிப்பிடப்பட்டவாறு பின்பற்றப்படும். அத்துடன் இக்கேள்வியின் போது 09.10.2020 மற்றும் 11.01.2021 ஆம் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கை இல முறையே 03/2020 மற்றும் 03/2020(i) என்பனவும் பின்பற்றப்படும்."**

தலைவர்,
உள்ளூர் அதிகார சபை பெறுகைக்குழு
வலி வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை(கொல்லன்கலட்டி)



# மரண அறிவித்தல்

தோற்றம்
22 • 05 • 1948



மறைவு
28 • 01 • 2024

## நிர்மலன் பர்னாந்து

ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் முன்பு யாழ் 5 ஆம் குறுக்குத் தெருவை வதிவிடமாகவும் கனடா Markham ஐ நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட நிர்மலன் பர்னாந்து அவர்கள் கடந்த (28.01.2024) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பர்னாந்து - இரட்ணம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மோசேஸ் - சூசானம் தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி பிறேமாவதி அவர்களின் அன்புக் கணவரும், Sobers Carfield, Liloyd Boniface, Subashini, Paul, காலஞ்சென்ற Shaun ஆகியோரின் அன்புத் தந்தையும், Niroshini, Priya, Kajan, Melissa ஆகியோரின் அன்பு மாமனாரும், Mathuraa, Cameron, Matulan, Meeshalan, Shaun, Braken, Kristian, Andrew, Jazmyn, Sanjay, Tamana ஆகியோரின் பாசமிகு பேரனும், Mia ன் பாசமிகு பூட்டனும், புஸ்பராணி, கருணாகரன், சாந்தி, வசந்தி, பவா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கருணாகரன், காலஞ்சென்ற வவா மற்றும் முருகையா, நவம், காலஞ்சென்ற ராஜன் மற்றும் சிங்கராயர், கிளாரா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் (03.02.2024) சனிக்கிழமை Lmmaculate Heart of Mary Churchல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 47, 5 ஆம் குறுக்குத்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 666 0482**

(cs53781) N-1)



# மரண அறிவித்தல்

தாயின் மடியில்
14 • 11 • 1945



இறைவன் அடியில்
28 • 01 • 2024

## செல்வநாயகி கந்தசாமி
### (இரண்டாயிரம் அக்கா)

யாழ்.நீராவியடி கல்லூரி வீதியை பிறப்பிடமாகவும் சுவிஸ்ஐ வசிப்பிடமாக கொண்ட செல்வநாயகி கந்தசாமி அவர்கள் (28.01.2024) ஞாயிற்றுக்கிழமை சுவிஸில் காலமானர். அன்னார் காலம் சென்றவர்களான கனகசபை-தெய்வானை தம்பதிகளின் அன்பு புதல்வியும், காலம் சென்றவர்களான வேலுப்பிள்ளை-நாகம்மா தம்பதிகளின் பெறாமகளும், பாலசிங்கம் பார்வதி தம்பதிகளின் மருமகளும் காலம் சென்ற கந்தசாமி பந்துலு அவர்களின் ஆருயிர் அன்பு மனைவியும், ரஞ்சினி, சிவகுமார், மாலினி, ராஜினி, உதயகுமார், தாரிணி, சுபாசினி ஆகியோரின் அன்புத்தாயாரும், ஜெயகிருஷ்ணா, ஜனதா, சந்திரராஜா, சிவாகரன், அனுஷா, ரமேஸ்குமார், தயாலேஸ்வரன் ஆகியோரின் மாமியாரும், ரோஷ்னி, சிந்துஜா, ஜெனிபன், திலக்ஷா, உதிக்ஷன், பிரிந்திகா, ஜனுசேந்திரா, திவேந்திரா, வியந்திரன், சர்மிகா,தர்சிகா, பிரித்தா, அக்ஷயன், நிலக்சன், தனுசன், சேலியா ஜெயபாலா, ராம்ஜி ஆகியோரின் பேர்த்தியும், ஆதிராவின் அன்பு பூட்டியும், காலஞ்சென்ற முறிகண்டி பரராஜசிங்கம், பூமணி, தவமணி, தையல்நாயகி, லதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம் சென்ற அன்னம்மா, சண்முகராசா பஞ்சட்சரம், துரைராஜா, ஆறுமுகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31.01.2024 புதன்கிழமை மதியம் 1.00-3.00 வரை சுவிஸ் Lausanne என்னும் இடத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பாவு-மகன் - 0041 64 702 27 -சுவிஸ்**
**வபா-மகள் -0041 79 368 32 -சுவிஸ்**
**சயிலா-மகள் -0128 97 635 084 -கனடா**
**பிரபா-மகன் -0041 79 950 0477-சுவிஸ்**

(CS 537841 Y-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸாரைத் தாக்கிய பெண் கைது!

ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபரின் மகள் என்று அறிமுகப்படுத்தி பொலிஸ் சார் ஜென்ட் ஒருவரைத் தாக்கி அநாகரிகமாக நடந்துகொண்ட குற்றச்சாட்டில் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கந்தரை பொலிஸ் குழுவொன்று முச்சக்கர வண்டியில் மாத்தறை யில் இருந்து பயணித்த போது, அதனுடன் சொகுசு ஜீப் ஒன்று மோதி விபத்துக்குள்ளானது. அந்த சொகுசு ஜீப்பைச் செலுத்தி வந்த பெண்ணைப் பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியபோது, தான் ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபரின் மகள் என்றும், அவுஸ் திரேலியாவில் சட்டத்தரணியாகச் செயற்படு பவர் என்றும் அறிமுகப்படுத்திய அவர், பொலிஸாருடன் அநாகரிகமாக நடந்து கொண்டார் என்று கூறப்படுகின்றது.

அவரைப் பொலிஸார் கைது செய்ய முயன்ற போது பெண், பொலிஸ் சார்ஜென்ட் ஒருவ ரைத் தாக்கினார் என்றும் பொலிஸார் தெரி வித்துள்ளனர். (ஏ-இ)

## தேர்தல்களை...

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத் தில், பல்லாயிரம் மக்கள் கலந்துகொண் டனர். போராட்டத்தின் தீவிரத்தன்மை யைக் கணித்த பொலிஸார், அது தொடர் பில் பல்வேறு தடையுத்தரவுகளை நீதி மன்றத்தின் மூலம் பெற்றுக்கொண் டனர்.

மாளிகாவத்தை பொலிஸ் பிரிவில் உள்ள முஸ்லிம் மயானத்துக்கு அருகில் இருந்து பிரதீபா மாவத்தை, ஜயந்த வீர சேகர மாவத்தை, மில்டன் பெரேரா மாவத்தை மற்றும் ஜும்மா சந்தி வழியாக சங்கராஜ சுற்றுவட்டத்தின் ஊடாகப் பய ணிப்பவர்களுக்கு இடையூறு ஏற்படுத் தும் விதமாக போராட்டத்தில் ஈடுபடுவ தற்கு நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித் தது.

மக்கள் வெள்ளத்தால் போராட்டம் கைமீ றியதையடுத்து, ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் பொலிஸார் கண்ணீர்ப்பு கைக்குண்டு மற்றும் நீர்த்தாரைப் பிர யோகம் என்பனவற்றில் ஈடுபட்டனர். இதனால் பலர் காயமடைந்தனர். பேரணி மீதான தாக்குதலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சஜித் பிரேமதாஸ;

நாட்டு மக்களை நெருக்கடிக்குள் தள் ளிய மனிதநேயமற்ற அரசுதான் தற் போது நாட்டை ஆள்கின்றது. நாம் ரணில், ராஜபக்ச அரசுக்கு அஞ்ச வில்லை. இது ஆரம்பம் மட்டும்தான். எமக்கு வேறு எதுவும் வேண்டாம், உடன் தேர்தலை நடத்துமாறு ராஜபக்சக்களின் கைப்பாவையாக செயற்படும் ஜனாதிபதி ரணிலை வலியுறுத்துகின்றோம். குறுக்கு வழியில் அல்ல, மக்கள் ஆசியு டன் ஆட்சிக்கு வருவதற்காகவே தேர்த லைக் கோருகின்றோம்.

மக்கள் வெள்ளத்தைக் கண்டு ரணில், ராஜபக்ச அரசு அஞ்சியுள்ளது. அத னால்தான் முதுகெலும்பில்லாத இந்த அரசு, எமது போராட்டத்தை முடக்கு வதற்கு முயற்சி எடுத்துள்ளது. நாம் நீதி மன்றத்தை மதிக்கின்றோம், சட்டத்தை மதித்தே செயற்படோம். ஆனால் மக்க ளின் உரிமையை அப்பட்டமாகமீறும் வகையில் இந்த அரசு செயற்பட்டுள் ளது. முதுகெலும்பு இருந்தால் மக்கள் முன்பாக வருமாறு ரணில், ராஜபக்சக்க ளுக்கு சவால் விடுக்கின்றேன். நீர்த்தா ரைப் பிரயோகம், கண்ணீர்ப்புகைப் பிர யோகம் என்பன எம்மீது மேற்கொள்ளப் பட்டன. மக்கள் வாக்குமூலமே ரணில், ராஜபக்ச ஆட்சிக்கு நாம் பாடம் புகட்டு வோம்.

பேரணிமீது தாக்குதல் நடத்தி அரச பயங் கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது. நாட்டு மக்களை படுபாதாளத்துக்குள் தள்ளி இந்த அரசு, ஜனநாயக உரிமை களையும் ஒடுக்க முற்படுகின்றது. இப்ப டியான அரசுக்கு முடிவுகட்டவேண்டும். ரணில், ராஜபக்சக்களுடன் எமக்கு 'டீல்' கிடையாது. இரட்டை நிலைப்பாட்டு அரசி யலைக் கடைப்பிடிப்பவர்களும் நாம் அல்லர். போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது தாக்குதலை நடத்திய அனைவரை யும் நிச்சயம் சட்டத்தின் முன்நிறுத்து வோம்' - என்றார். (அ-ம-44)

## கோத்தாபயவை...

இலங்கையில் போர் முடிந்து பதினைந்து ஆண்டுகளுக்குப் பிறகு, முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உள் நாட்டுப் போரின்போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனிதகுலத் துக்கு எதிரான குற்றங்களில் முக்கிய மான வகிபாகத்தைக் கொண்டிருந்ததற் கான பெருமளவு ஆதாரங்கள் வெளி வந்துள்ளன என மனித உரிமை வழக் கறிஞர்கள் புதிய அறிக்கையில் தெரி வித்துள்ளனர்.

சிறிலங்கா அதன் வன்முறை நிறைந்த கடந்தகாலப் பிரச்சினைகள் தொடர்பில் அக்கறையுடன் இருக்குமாயின், போர்க் குற்றங்களிலும் மனித குலத்துக்கு எதி ரான குற்றங்களிலும் முன்னாள் ஜனா திபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு இருந்த வகிபாகம் தொடர்பாக அவரைப் பொறுப் புக்கூற வைக்கவேண்டும்.

தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக் கும் எதிராக வன்முறைகளில் ஈடுபட்டதா கக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களில் மிகவும் மோசமானவராக கோத்தாபய ராஜபக்சவே இருக்கமுடியும். 1989 ஆம் ஆண்டுதொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரைக்கும், அத்துடன் இன்றுவரைக்கும் தண்டனையிலிருந்து விலக்களிக்கும் போக்கு காணப்படுகின்றது. பல விசா ரணை ஆணைக்குழுக்கள் அமைக்கப் பட்டு, அவற்றின் அறிக்கைகள் வெளியி டப்படாமலும் பரிந்துரைகள் நிறைவேற் றப்படாமலும் உள்ளன. இவை பாதிக்கப் பட்டவர்களின் குடும்பங்களுக்கு ஏமாற் றத்தினையும் அரசாங்கத்தின் மீது அவநம்பிக்கையையும் ஏற்படுத்தின. குற்றவாளிகளைப் பொறுப்புக்கூறவைக் காமல், பாதிக்கப்பட்ட சமூகங்களுக்குத் தேவைப்படும் 'மீளவும் நிகழமாட்டா' என் பதற்கான உத்தரவாதத்தினை வெறு மனே ஆணைக்குழுக்களின் விசார ணைகளால் பெற்றுவிடமுடியது என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது - என்றுள்ளது. (அ-ம-7)

## சாந்தனின்...

பேச்சுகள் இடம்பெற்றுள்ளன என்றும் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடா ளுமன்ற உறுப்பினருமான சி.சிறீதரன் உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப் பட்டு 32 ஆண்டுகால சிறைவாசத்தின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள சாந்தனை மீண்டும் இலங்கைக்கு அழைத்துவர வேண்டிய கட்டாய நிலைமை தொடர்பில் சாந்தனின் தாயார் தில்லையம்பலம் மகேஸ்வரி அண்மையில் வலியுறுத்தியி ருந்தார். சாந்தனும், தானும் இது தொடர் பில் பல்வேறு பேச்சுகளையும் கோரிக் கைகளையும் விடுத்துள்ளபோதிலும், அவற்றை உரியதரப்புகள் கண்டுகொள் ளவில்லை என்றும், தற்போது உயி ருக்கே ஆபத்தை விளைவிக்கக்கூடிய சிறுநீரகப் பாதிப்பு, கல்லீரல் பாதிப்பு உள்ளிட்ட நோய்களால் சாந்தன் அவதி யுற்று வரும்நிலையில், அவரை இலங் கைக்கு அனுப்ப இலங்கை, இந்திய அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையிலேயே, சாந்தனின் விடு தலை தொடர்பில் இலங்கையின் வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி உள்ளிட் டோருடன் பேச்சு நடத்தியுள்ளதாகவும், அவர் அடுத்த சில தினங்களுக்குள் விடுவிக்கப்படுவார் என்று தனக்குத் தெரி விக்கப்பட்டுள்ளதாக சி.சிறீதரன் உதய னுக்கு நேற்று இரவு தெரிவித்தார்.

சிறீதரன் எம்.பி. மேலும் தெரிவித்ததா வது:-

சாந்தனின் விடுதலை தொடர்பில் பல் வேறு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தப் பட்டுள்ளது. இலங்கையின் வெளிவிவ கார அமைச்சர் அலி சப்ரியுடன் இது தொடர்பில் நாங்கள் பேச்சு நடத்தியுள் ளோம். அவர் அடுத்த சில தினங்களுக் குள் சாந்தனின் விடுதலை சாத்தியம் என்று எங்களுக்குத் தெரிவித்துள்ளார். சென்னைத்

துணைத்தூதரகத்தினருடனும் அலி சப்ரி பேச்சு நடத்தியுள்ளார். சாந்தனின் பயண ஆவணங்கள் அனைத்தும் முழு மைப்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், இந் திய பாதுகாப்பு அமைச்சின் ஒப்புதலை யும் சில கோப்புகளையும் பெற வேண்டி யுள்ளதாலேயே சாந்தன் இலங்கையை நோக்கிய பயணப்படுவது தாமதமாகின் றது. அடுத்த சில தினங்களில் இந்த ஆவணங்கள் கைக்கு கிடைத்தது சாந்தன் இலங்கைக்கு அனுப்பிவைக் கப்படுவார் - என்றார். (அ-ம-26)

## பொலிஸாரைத்...

மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் இரண்டு பொலிஸ் உத்தி யோகத்தர்கள் நேற்றுமுன்தினம் ஆனைக்கோட்டைப் பகுதியால் சென்று கொண்டிருந்தபோது அவர்களை வழிம றித்த குழுவொன்று சரமாரியாகத் தாக் குதல் நடத்தியதுடன், தலைக்கவசம் உள்ளிட்ட சில பொருள்களையும் கொள் ளையிட்டுச் சென்றுள்ளது.

மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதையடுத்து, தாக்குதலுக்கு இலக்கான பொலிஸ் அலுவலர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதுடன், சந்தேகநபர்களாக சாவற்கட்டுப் பகுதி யைச் சேர்ந்த ஐவர் அடையாளப்படுத்தப் பட்டனர். அவர்களில் இருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டு நேற்று மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட் டனர். அவர்களை அடுத்த 14 நாள்க ளுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. மூவர் நேற் றையதினம் கைதுசெய்யப்பட்ட நிலை யில் அவர்களை நீதிமன்றத்தில் முற்ப டுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன. (அ-ம-125)

## கோழித்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதா வது:-

கோழிகள் மதில்பாய்ந்து இன்னொருவ ருடைய வீட்டுக்குள் அல்லது காணிக் குள் செல்வது தொடர்பில் உறவு முறை யான இருவருக்கு இடையில் கருத்து மோதல்கள் அண்மைக்காலமாக இடம் பெற்று வந்துள்ளன. நேற்றும் அவ்வா றாக கோழிகள் பிறிதொருவருடைய வீட்டில் மேய்ந்ததையடுத்து ஏற்பட்ட வாக்குவாதம் பின்னர் கைகலப்பாகி கொலையில் முடிந்துள்ளது. தாக்குத லில் காயமடைந்த 37 வயதான நபர் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். சந்தேகநபரான 54 வயதுடையவர் கைது செய்யப்பட்டுள்ளார். சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். எஸ்.எம். பிறடோனின் தலைமையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. (அ-ம-26-125)

## தீவிர...

அரசாங்கத்துக்கு எதிராக கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பிரயோகிக்கப்பட்ட நீர்த்தாரை மற் றும் கண்ணீர்ப்புகைக்குண்டுத் தாக்குத லால் பாதிக்கப்பட்டே அவர் தீவிர சிகிச் சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். மூச்சுத்திணறல் ஏற்பட்டமையே அவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்ட மைக்குக் காரணம் என்று மருத்துவம னைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ-ம)

## ஐஸ்...

விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட

சுற்றிவளைப்பிலேயே மேற்படி கைது இடம்பெற்றது. அவரிடமிருந்து 920 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட் கப்பட்டது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்ப டுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள் ளன. (அ-ம-110)

## இழுவைமடியைப்...

இரவு அவர்கள் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு அதிகாரிகளிடம் ஒப்படைக் கப்பட்டனர். அவர்களைச் சட்டநடவடிக் கைக்கு உட்படுத்தும் நகர்வுகள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-56-60)

## எரிவடைந்த...

மேற்படி சடலம் மீட்கப்பட்டுள்ளது. வீட்டிலிருந்தவர்கள் தத்தமது தொழில் நிமித்தம் வெளியே சென்றுவிட்டு வீட்டுக் குத் திரும்பியபோது, மூதாட்டி எரிவ டைந்த நிலையில், உயிரிழந்திருப்பதை அவதானித்துள்ளனர். இது தொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டு சடலம் மீட்கப்பட்டு, உடற் கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டது. (அ-ம-125)

## கிணற்றுக்...

மாக மீட்கப்பட்டுள்ளார்.

ஜெனிற்றா சயந்தன் (வயது -29) என்ப வரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவரா வார். இவரது இறப்புத் தொடர்பில் பல் வேறு கோணங்களில் பொலிஸார் விசா ரணைகளை முன்னெடுத்து வருகின்ற னர். தடயவியல் பொலிஸாரும் விசார ணைகளுக்கு அழைக்கப்பட்டுள்ளனர். (அ-ம-113)

## யாழ்ப்பாணத்தில்...

பின்னர் அண்மையில் மேற்கொள்ளப் பட்ட மீளாய்வுத் தகவல்களின்போதே இந்த விடயம் தெரியவந்துள்ளதாக யாழ்ப்பாணம் மாவட்ட தேர்தல்கள் அலு வலகம் தெரிவித்துள்ளது. (அ-ம-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தால் சீனாவின் நிலைமையே வரும்

## எச்சரிக்கின்றார் ஹிருணிகா

கொழும்பு, ஜன.31

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தால் சீனாவில் உள்ளது போன்ற நிலைமை இங்கும் ஏற்படும் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர குற்றஞ்சாட்டியுள்ளார். கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஏ-இ)


## வேலைவாய்ப்பு

யாழ். நகரில் இயங்கிவரும் எமது நிறுவனத்திற்கு கீழ்வரும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

1. வரவேற்பாளர் (இரவு)
2. ஒப்புநோக்குனர் (பகல், இரவு)
3. கிராபிக் டிசைனர் (பகல், இரவு)



நேரில் சமுகம்தரவும்.
காலம்: இன்று 31.01.2024 (புதன்கிழமை)
நேரம்: காலை 9.00 மணிமுதல் முதல் பி.ப 2.00 மணிவரை.

**உதயன் பணிமனை**
இல. 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலையாட்கள் தேவை

[illegible] மாட்டுப்பண்ணை பராமரிப்பவர், பல வேலையாட்கள், சமையற்காரர், தோட்டக்காரர் தேவை. குடும்பமாகவும் வரலாம். தங்குமிட வசதி, மதிய உணவு இலவசம். [illegible]

தொடர்பு: 077 909 5491

## காணி, வீடு, மூன்று கடைத்தொகுதி விற்பனைக்கு

இல-17 மின்சார நிலைய வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்த 3 1/4 பரப்பு காணி, வீடு, 3 மூன்று கடைத் தொகுதி என்பவற்றுடன் 13 அறைகளுடன் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
077 993 4169, 077 071 1217

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம்-கைதடி A-9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**நிலப்பரப்பு**
- நல்ல சூழல் நன்னீருற்று
- கைதடி சந்தியிலிருந்து 200 மீற்றர் தூரம்.
- [illegible] 300 மீற்றர்
- விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.

077 129 4999
076 788 0591

## காணி விற்பனைக்கு

கல்வியங்காட்டு சந்தைக்கு மிக அருகாமையில் 1 1/4 பரப்பளவு கொண்ட செவ்வக காணி விற்பனைக்கு. சுப்பர் மார்க்கெட் கட்டுவதற்கு மிகவும் உகந்தது. தரகர்கள் தொடர்பு கொள்ள வேண்டாம்.

தொடர்புகளுக்கு - 076 879 3951

## மாதகல் புனித லூர்து அன்னை திருத்தலதிருவிழா 17. 02. 2024

### கடைகளுக்கான இடங்கள் வழங்கல்

17.02.2024 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ள மாதகல் புனித லூர்து அன்னை திருத்தல திருவிழாவின்போது வியாபார நடவடிக்கை யில் ஈடுபடும் கடைகளுக்கான இடங்கள் 04.02.2024 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வழங்கப்படவுள்ளது.

கடைகளுக்கான இடங்களைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மாதகல் புனித லூர்து அன்னை திருத்தலத்திற்கு உரிய நேரத்திற்கு சமுகம் தந்து தங்களின் கடைகளுக்கான இடங்களை முன் கூட்டியே பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மேலதிக தொடர்புகளிற்கு: 077 933 9979 / 077 115 4628
இலக்கத்திற்கு தொடர்புகொள்ளவும்.

பங்குத்தந்தை,
மாதகல்.

## TECHNA
Technical Institute
Smart thinking leads to innovate
வீரசிங்கம் மண்டபம், 3rd மாடி, யாழ்ப்பாணம். 077 170 3549 Technical Institute

### A/L 2023 பிரிவு
க.பொ.த உயர்தர தொழினுட்பப்பிரிவு

### இலவச செயன்முறை வகுப்புக்கள்

**உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்**

M.விஷ்ணு P.நிரோஜனன்

இறுதிச் செயன்முறைப் பரீட்சை வரையான காலப்பகுதி முழுவதும் அனைத்து செயன்முறைகளும் தொடர்ச்சியாக இலவசமாக நடைபெறும்.

ஆரம்பம் : 01.02.2024, வியாழன் மாலை 3.00 மணிக்கு

B1, B2, SPOT செயன்முறைகள் பூரணமாக பயிற்றுவிக்கப்பட்டதன் பின்னர் செயன்முறை பரீட்சைகளும் நடைபெறும். குழு அடிப்படையில் நடைபெறுவதால் மாணவர்களுக்கு ஏற்ற வகையில் நேர வசதிகள் ஒழுங்கு செய்து தரப்படும். வெளிமாவட்ட மாணவர்களுக்கான தங்குமிட வசதிகளுக்கான தொடர்புகள் ஏற்படுத்தி தரப்படும்.

A/L 2024 உயிர் முறைமைகள் தொழினுட்பப்பிரிவு மாணவர்களுக்கு 12th, 13th ஆண்டு பாடத்திட்டத்திற்குரிய 4th தவணை வரைக்குமான அனைத்து செயன்முறைகளும் இலவசமாக செய்து காட்டப்பட்டு [illegible]

வீரசிங்கம் மண்டபம், 3rd மாடி, யாழ்ப்பாணம். 077 170 3549 Technical Institute


# மரண அறிவித்தல்



தோற்றம் 19.11.1967 — மறைவு 18.01.2024

## நாகராசா கோகுலராஜன்

**(முன்னாள் விவசாயப்போதனாசிரியர், பழைய மாணவன் யாழ் இந்துக்கல்லூரி உயிரியல் பிரிவு 1986)**

யாழ்ப்பாணம் கச்சேரியடியை பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும், தற்பொழுது அமெரிக்காவில் வசித்து வந்தவருமாகிய நாகராசா கோகுராஜன் 18.01.2024 அன்று அமெரிக்காவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகராசா (இளைப்பாறிய அதிபர்) நீலாம்பிகை (இளைப்பாறிய ஆசிரியை, யாழ் புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்) தம்பதிகளின் அன்புமகனும், கனகலிங்கம் கருணாதேவி (புங்குடுதீவு) தம்பதிகளின் அன்பு மருமகனும், நளாயினியின் அன்புக் கணவரும், தர்சிகா, அருணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் செந்தில்ராஜன் (அவுஸ்திரேலியா, சிங்கப்பூர்), யோகநந்தினி (பிரான்ஸ்), யோகராஜன் (இங்கிலாந்து), ஆகியோரின் அன்புச்சகோதரனும், வித்யா (அவுஸ்திரேலியா), மகேஸ்வரன் (பிரான்ஸ்), லதாமதி (இங்கிலாந்து), மற்றும் கமலினி (அமெரிக்கா), சிவதர்சினி (இலங்கை), ஆகியோரின் அன்பு மைத்துனரும், Dr.குருபரானந்தா (அமெரிக்கா) Dr.ராஜகுமார் (இலங்கை), ஆகியோரின் அன்புச் சகலனும் ராகவி, சந்தீப் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், பிரவீன், அட்சரா, அஷானா ஆகியோரின் பாசமிகு மாமாவும், வைஷ்ணவி, பிரணவி, மற்றும் கவிஷ்கா, ஜனகனன், அக்சயன், லக்சவி ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 04-02-2024 அன்று முற்பகல் 8 மணி முதல் No 2B Elivitigala Mw, Colombo 08. முகவரியிலுள்ள Jeyaratne மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, இறுதிக்கிரியைகள் 12.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் பொரளை கனத்தை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

செந்தில்ராஜன் - 006596461936
யோகநந்தினி - 0033669663093
யோகராஜன் - 0044788678844



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் [illegible] உள்ள அவர்களது பணிமனையில் 31.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org